# மங்களேஸ்வரம்



சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள்

தோற்றம்
17.07.1911

மறைவு
26.12.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302.122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களேஸ்வரம்

சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள்
அவர்களின் நினைவாக
வெளியிடப்படுகின்றது.
04-01-2002

திண்ணபுரம், காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களேஸ்வரம்



திருவாதிரைத் திருநாளன்று ஈழத்துச் சிதம்பரத்துக்
கூத்தப்பிரானுக்கு
சிவஸ்ரீ.க.மங்களேஸ்வரக்குருக்கள் அவர்கள்
அபிசேகம் செய்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள்

# வம்ச வரலாறு

திரு உத்தரகோசமங்கையென்னுந் திருத்தலத்திலிருந்து மங்களேஸ்வர சுவாமிக்கு இப்போ பூசை செய்கிறவர்கள் முப்பத்திரண்டு குருமார்கள். இந்த முப்பத்திரண்டு குருக்கமாருக்கும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னால் குருக்கமார் முப்பத்திரண்டு பேருக்கும் ஒவ்வொரு செப்புப் பட்டயம் கொடுக்கப்படுகிறது. செப்புப்பட்டயத்திலெழுதப்படுகிற விஷயம் என்னவானால்

## மங்களேசுவரர் துணை

கலியப்தம் நாலாயிரத்து நானூறு. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்திருநூற்றைம்பத்தொன்று. பிரபவாதி வருஷம் முப்பத்திரண்டாவது விளம்பி வருஷம் சித்திரை மாதம் இருபத்தைந்தாந் திகதியும் திங்கட்கிழமையும் சோதி நட்சத்திரமும் பூருவபக்கத் திரயோதசியும் மிதுனலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதப்படுகிற சாதனம்:-

திரு உத்தரகோசமங்கையென்னும் திருத்தலத்தில் எழுந்தருளிவீற்றிருக்கின்ற மங்களேஸ்வரசுவாமி கோயிலுக்கு இப்போ முதற் பூசைப்பங்காளராக இருக்கிற காஞ்சீபுரம் கல்யாணசுந்தரக்குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக்குருக்கள், முதல் ஸ்தானிகராகவும் மற்றவர்கள் தங்கள் தங்கள் பூசைப் பங்கு முறைப்படி ஸ்தானிகர்களாகவும் மகாராசாவாகிய என்னால் தத்துவங் கொடுக்கப்படுகிறது.

இன்று முதலாக சகலவிதமான காரியங்களையும் செய்யவும் செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படுகிது. மேற்படி கோயிலிலேயுள்ள ஆபரணம் முதலான சகல விதமான சாமான்களும் கஜானாப் போக்கு முதலிய திறவு கோல்களும் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கிறவர்கள் எல்லோரும் பூசை செய்கிறவர்களும் ஸ்தானிகர்களுமாயிருக்கிற குருக்கமார் கட்டளைப்படி நடக்கவேண்டும். மேற்படி கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப்படவேண்டும். இவர்களுக்கு மங்கள புகளமென்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர்களுக்குக் கோயிலிலே சம்பளம் கிடையாது. இவர்கள் மங்கள புக்களமென்னும் கிராமத்தை பூசைப்பங்கு ஸ்தானிகர் பங்குபோல முப்பத்திரண்டு பங்காகப் பகிர்ந்துகொள்ளவேண்டியது. இவர்களினால் ஒரு காலத்திலும் கிரயத்திற்குக் கொடுக்கப்படாது. வாங்குகிறவர்களுக்கும் இராசசபையிலே தண்டம் விதிக்கப்படும். மற்றப் பணிவிடைகாரர்களுக்கும் இவர்களாலேயே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு விபூதிப் பிரசாதம் அனுப்ப வேண்டியது. இந்தப் பட்டயத்தை சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலும் என்னுடைய வம்சத்தினராலும் எந்தக் காலத்திலும் இராமநாதபுரத்தையும் திரு உத்தரகோசமங்கையையும் இராச்சிய பரிபாலனம் செய்கிற இராசாக்களாலும் இந்தப் பட்டயத்தை அழிக்கப்படாது. மேற்படி கோயிலின் பூசைப்பங்காளராகவும் ஸ்தானிகர்களாகவும் தத்துவம் பெற்ற குருக்கமார்களுக்கு இந்தப்பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் விபூதி உத்திராட்சம் அழியாமல் இருக்கும் வரைக்கும் இந்தப்பட்டயமானது அழியாமல் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது.

இந்தப்பட்டயத்தை ஒருவராலும் அழிக்க முடியாது. இதிலே என்னுடைய கையெழுத்தும் வைக்கிறேன்.

இங்ஙனம்
சோமசுந்தர சேதுபதி மகாராசா

இதற்கு முதற் சாட்சி எனது முதலாவது மந்திரி
இராமசாமி.

இரண்டாம் சாட்சி எனது முதலாவது சேனாதிபதி
சொக்கலிங்கம்.

மூன்றாம் சாட்சி எனது புரோகிதர்
கிருஷ்ணசாமி ஐயர்.

இந்தச் சாட்சிகள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முப்பத்திரண்டு குருக்கமார்களுக்கும் கொடுத்தேன் அவர்களும் தங்கள் கைச்சாத்திட்டு ஏற்றுக் கொண்டார்கள்.

இராமநாதபுரத்திலேயுள்ள திரு உத்தரகோசமங்கை தேவஸ்தானத்திலேயும் ஒரு பட்டயமிருக்கும். இவ்வளவு விஷயங்களும் சோமசுந்தர சேதுபதி மகாரா சாவாகிய என்னாலேயே முப்பத்திரண்டு குருக்கமாருக்கும் எழுதிக் கொடுத்து இதோடு பட்டயமும் கொடுக்கப்பட்டது. காஞ்சிபுரத்திலே இருந்து வந்த கல்யாணசுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக் குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்களாகிய நான் இந்தச் சரித்திரத்தை எழுதத் தொடங்குகிறேன்.

எனது தகப்பன் கல்யாணசுந்தர குருக்கள். காஞ்சிபுரத்திலே இருக்கிறார். எனது தம்பிமராகிய ஏகாம்பரக் குருக்களும் சபாபதிக்குருக்களும் காஞ்சிபுரத்திலேயே இருக்கிறார்கள். நான் திரு உத்தரகோசமங்கையென்னும் இந்த இடத்திலே இருக்கிற சொக்கநாதக்குருக்கள் முதலாவது மகள் ஞானப் பூங்கோதை அம்மாளை விவாகம் செய்து இருபத்திரண்டு வருஷ காலம் முதற்பூசைப் பங்காளராக இருந்து வருகிறேன். எனக்கு முதற் பூசைப் பங்கு வந்த காரணம் நான் விவாகம் செய்து முதல் முறை இராசசபைக்குப் போனபோது இராசாவின் பேரிலே சம்ஸ்கிருதகீர்த் தனங்களைப் பாடிக் கொண்டு போய் மகாராசா முன்பு வாசித் தேன். என்னோடு வந்த மற்றவர்கள் மகாராசாவின் பேரிலே ஒன் றும் வாசிக்கவில்லை. நான் வாசித்தவுடன் மகாராசா சந்தோஷப் பட்டு நீர் சம்ஸ்கிருதம் நன்றாக வாசித்திருக்கிறீர். மற்றவர்கள் நன் றாய் வாசித்ததாகத் தெரியவில்லை. ஆனதன்மையினால் நீரே இன்று முதலாக உத்தரகோசமங்கையிலேயுள்ள மங்களேசுவர சுவாமி கோயி லுக்கு முதற் பூசைப் பங்காளராக இருக்கவேண்டியது என்று சோம சுந்தரசேதுபதி மகாராசா சொன்னார்.

அந்தநாள் தொடக்கம் நானே முதற்பூசைகாரனாக இருந்து வருகிறேன். எனது மகன் கார்த்திகேயக் குருக்களின் புத்திரர் திரு நீலகண்டக் குருக்கள் இவர் புத்திரர் விசுவநாதக்குருக்கள். விசுவா நாதக்குருக்களாகிய எனது காலத்தில் முன்னே சொல்லப்பட்ட முப்பத்திரண்டு குருக்கமார்களில் நாலு வீட்டுக்காரர் சந்ததியின்றி அழிந்து போனார்கள். இப்போது இருப்பவர்கள் இருபத்தெட்டு வீட்டுக்காரர். இவ்விருபத்தெட்டு வீட்டுக்காரருமே பூசைப் பங்கை யும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வருகிறோம்.

இப்படிப் பார்த்து வருங் காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டு பட்டது. இந்தக் கலகத்துக்குப் பயந்து எனது சிற்றப்பா மகன் வைத்தியேசுவரக் குருக்களும் எங்கள் பூசைப் பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் எங்களது அடுத்த பங்காளர் இரத்தினசபாபதிக் குருக்களிடம் ஒப்பித்துவிட்டு நாங்களிருவரும் எங்கள் சமுசாரமும் காஞ்சிபுரம் போய் அங்கே ஒரு வருஷம் வரையிலிருந்து மறுபடியும் திரு உத்தரகோசமங்கை வந்து பார்த்தபோது பதினாறு வீட்டுக்கார ரையும் காணவில்லை. இரத்தின சபாபதிக்குருக்களைக் கேட்டபோது அவர் சொன்னார் பதின்மூன்று வீட்டுக்காரர் இன்ன இடம்போனார் களென்பது தெரியவில்லை. மூன்று வீட்டுக்காரர் வைசூரியினா லிறந்துவிட்டார்கள் என்பதாகச் சொன்னார். இப்போது இங்கே இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறவர்கள் பத்து வீட்டுக்காரர். என்பதாகவும் சொன்னார். இரண்டு வருஷகாலம் பன்னிரண்டு வீட்டுக்காரருமே, பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வந்தோம். மறுபடி இராமலிங்க சேதுபதி மகாராசா முன்பாக நாங்கள் பன்னிரண்டு பேரும் போய் பூசையை விட்டுப் போனவர்களது பங்கையும் இறந்தவர்களினது பங்கையும் பற்றி முறையிட்ட பொழுது மகாராசா அவர்கள் சரிவரப் பன்னிரண்டு பங்காகப் பகிர்ந்து எங்களுக்குள்ளே வியாச்சியமில்லாமல் மக்களம் புக்களம் முதலிய வயற்கிராமங்களையும் பன்னிரண்டு பங்காகவே பங்கிட்டுத் தந்தார்.

அந்தநாள் முதல் நாங்கள் பன்னிரண்டு வீட்டுக்காரருமே பூசையையும் ஸ்தானிகர் வேலையையும் நடத்தி வருகிறோம். இவ்வளவும் விசுவநாதக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எண்பத்தாறு.

விசுவநாதக் குருக்கள் புத்திரன் காங்கேயக் குருக்கள். புத்திரர் ஆதிசிதம்பரேசுவரக் குருக்கள் இவர் புத்திரர் மாணிக்கவாசகக் குருக்கள். இவர் புத்திரர் பரமேசுவரக் குருக்கள். இவர் புத்திரர் பால சுப்பிரமணியக் குருக்கள். இவர் புத்திரர் கனகசபாபதிக் குருக்கள். இவர் புத்திரர் வையாபுரிக் குருக்கள். இவர் புத்திரர் சுந்தரேசுவரக் குருக்கள். இவர் புத்திரர் குருசாமிக் குருக்கள். இவர் புத்திரர் மாணிக்கவாசகக் குருக்கள். இவர் புத்திரர் மங்களேசுவரக் குருக்கள். இவ்வளவும் மங்களேசுவரக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. நாங்கள் பன்னிரண்டாம் வீட்டுக்காரரும் கோவிற்பூசையை ஒழுங்காகப் பார்த்து வந்தோம்.

இப்படி நடக்குங் காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. கலகமானது ஒரு வருஷகாலம் தீராமலே நெடுக நடந்து கொண்டேயிருந்தது. இந்தக் கலகத்தை மங்களேசுவர சேதுபதி மகாராசாவினாலும் அடக்கிக் கொள்ள முடியவில்லை. நாங்களும் கலகத்திற்குப் பயந்து மங்களேசுவர சேதுபதி ராசாவிடம் முறையிட்ட போது அவர் கவனிக்கவில்லை. நாங்கள் சொல்லியதை மகாராசாவும் கவனியாதபடியால் நாங்களொருவகையாலும் இங்கேயிருந்து பூசை செய்ய முடியாதவர்களாயிருக்கிறோம். சொற்பகாலம் இந்தத் தேசத்தை விட்டு கலகம் தீர்ந்தபின் மறுபடி வருவோமென்று மனதில் நினைத்துக் கொண்டு நாங்கள் நாலு வீட்டுக்காரரும் மங்களேசுவரக் குருக்களாகிய நானும் சுந்தரரேசுவரக் குருக்களும் அருணாசலக் குருக்களும் இராமலிங்க க்குருக்களும் ஆகிய நாலு வீட்டுக்காரரும் மற்ற எட்டுக் குருக்கள்மார் வசம் எங்கள் பூசையை ஒப்புவித்து விட்டு நாங்கள் நாலு பேரும் மற்றக் குருக்கள்மாரறியாதபடி எங்களிடத்தே இருந்த ஆபரணம் முதலிய சாமான்களெல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையும் மங்களேசுவரசுவாமி கோயிலின் தெற்குப் பக்கத்திலே யிருக்கிற போக்கிலே அடக்கம் செய்து போக்கைக் கபாட பந்தனம் செய்து கொண்டு கோயில் மகாமண்டபத்தில் ஈசானிய பாகத்திலிருக் கும் தூணில் துவாரம் செய்து அதில் திறவுகோலை வைத்து அதன் மேல் அரக்கு வைத்து அதில் யானைக் காசு முத்திரை செய்து வைத் துப் போட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் அருணாசலக் குருக்களும், இராமலிங்கக் குருக்களும் அவரவர்கள் சமுசாரமும் பிள்ளைகளும் சுவாமி தெரிசனம் செய்து அவ்வவ் விடத்தை விட்டு நீங்கினோம்.

அவ்விடத்தை விட்டு நீங்கும் போது எங்கள்லோருக்கும்மன திலேமிகுந்த துக்கமும், அழுகையுமாகவே இருந்தன. பிரயாணமாய்த் தெற்பசயனம் வந்து வெற்றிலை மண்டபமடைந்து, இராமேசுரம் வந்து ஆறுமைல் தூரமுள்ள சேதுவையடைந்து, சங்கற்பமுடன் ஸ்நானம் செய்து கந்தமாதனத்தைத் தெரிசித்து சேதுமாதவரையும் சேதுகாவலனையும் தெரிசித்து வருகையில் சுந்தரேசுவரக் குருக்கள் மனைவி சேஷம்மா வைசூரி நோயாலிறந்துவிட்டாள்.

சுந்தரேசுவரக் குருக்கள் புனர்விவாகம் செய்ய மன மில்லாதவராய் இருந்தார். ஆறுமாசம் வரையில் ராமே சுரத்திலிருந்தோம். அப்போதும் உத்தரகோசமங்கையில் கலகந் தீரவில்லை. எவ்விடம் போகிறதென்று தெரியாமல் அதிக மனவியா கூலமாயிருக்கையில் வித்துவசிரோன்மணியும், சைவசமயப் பிரவும் தனவானுமாகிய ஒருவரைக் கண்டோம். ஒருவருக் கொருவர் யோக க்ஷேமங்களையும் ஊர் பெயரையும் விசாரிக்கும் போது வித்துவசிரோன்மணியும் சைவசமயப் பிரபுவுமாகிய தனவான் தன்னுடைய பெயர் முத்துமாணிக்கம் செட்டியாரென வும் தாமிருப்பது யாழ்ப்பாணமெனவும் சொன்னார். யாழ்ப்பாண மென்ற தேசம் எந்த ஜில்லாவிலேயுள்ளதென்று விசாரித்தேன்.

அவரதற்கு இராவணனால் இராச்சியம் செய்த இலங்கையிலே வடக்குப் பக்கத்திலேயுள்ள ஓர் தேசம் யாழ்ப்பாணமென்றும், பெயர் வந்த காரணம், இந்தியாவாகிய இங்கே சோழதேசத்திலே தொண்டை நாட்டிலுள்ள கவிவீரராகவனென்னும் குருடன், தனது மனைவியோடு கோபித்துக்கொண்டு இலங்கையிலே மணற்றி என் னும் இடத்திலிறங்கி செங்கடக நகரிலேயிருக்கிற செயதுங்கவரராச சிங்கனெனப் பெயரையுடைய இராசனது சபையையடைந்து இரா சாவின் பேரிற் பாடி அந்தப் பிரபந்தத்தை முடித்தான். இரசா யாழ்ப்பாடியின் பேரிற் சந்தோசப்பட்டு அவனுக்கு மணற்றி என் னும் இடத்தையும், யானை, குதிரை, பல்லக்கு முதலிய சாமான்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கொடுத்து அனுப்பினார். யாழ்ப்பாடி அரசனுக்குப் பல ஆசி கூறி அவற்றைப் பெற்றுக்கொண்டு மணற்றியை அடைந்து மணற்றி எங்கும் சுற்றிப் பார்த்து நல்லூருக்குச் சமீபத்திலே பாணன் என்னும் குளத்தையும் வெட்டுவித்து அவ்விடத்தில் இராச்சியத்தை நடத்தினான். தான் பரிசாகப் பெற்ற இடத்திற்கு ''யாழ்ப்பாணம்'' என்னும் பெயரை வைத்து அரசாட்சி செய்தான்.

அந்த யாழ்ப்பாணத்திற்கு வடமேற்குப்பக்கமாய் சமுத்திரத் தாற் சூழப்பெற்ற காரைதீவிலேயுள்ள ஊர்காவற்றுறைக்குச் சமீபமாக, இப்போ இருக்கிறவர் ராமசேதுமகாராசாவின் மகன். இவ்வரசன் இருந்த இடம் இப்பொழுதும் இராசாவின் தோட்டம் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. குளக்கோட்டுமகாராசாவினால் ''வியாவில்'' என்னுமிடத்திற் கட்டப்பட்ட ஐயனார் கோவிற் பூசைக்கு குருக்கமாரை அழைத்து வரும்படி குளக்கோட்டுமகாராசா என்னை அனுப்பினார். குருக்கமாரை அழைத்தற்கு வந்து சேர்ந்தேன், என்று சொல்லியதைக் கேட்ட நான் யாழ்ப்பாணம் போவதே நல்லதென்று மனதிலே தீர்மானம் செய்து கொண்டு என்னோடு வந்த மூவரையும் கேட்டேன். கேட்டதற்கு அருணாசலக் குருக்களும் இராமலிங்கக்குருக்களும் தாங்கள் யாழ்ப்பாணம் வரவில்லையென்று சொல்லிவிட்டார்கள். சுந்தரேஸ்வரக் குருக்கள் என்னோடு யாழ்ப்பாணம் வருவதாகச் சொன்னார். முத்துமாணிக்கஞ் செட்டியாருக்கு நான் சொல்லியது என்னவானால் நாங்களிருவரும் சம்சார சகிதமாய் உம்மோடு யாழ்ப்பாணம் வருகிறோம். நீர் வேறோரிடமும் குருக்கள்மாரை அழைக்கப்போகவேண்டாம் என்று சொல்லியதை முத்துமாணிக்கஞ் செட்டியார் கேட்டு மிகச் சந்தோஷப்பட்டு நான் உங்களையே அழைத்துப் போவதாக மனதிலே நினைக்க நீங்களாகவே யாழ்ப்பாணம் வருகிறோமென்றது எனக்கு மிகச் சந்தோஷமாயிருக்கிறது. ஆனபடியால் காவிரிப்பூம் பட்டினத்துள்ள எனது தாய் தந்தையாரது தபத்தினாலும் இராமலிங்கப் பெருமானுடைய அனுக்கிரகத்தினாலும் நான் குருக்கள்மாருக்குத் தேடித்திரிந்து அலையாமல் நீங்கள் வருகிறோமென்று சொல்லியது மிகச் சந்தோஷம்.

நான் காவிரிப்பூம் பட்டினத்திற்குப் போய் எனது தாய் தந்தையரைக் கண்டு வருகிறேன். அதுவரையும் நீங்கள் இவ்விடத்திலிருக்கலாம் என்று சொன்னார். எங்களுக்குத் தான் வருமளவும் செலவுக்குக் காசு தந்து விட்டுப்போய்விட்டார்.

போய்த் தனது ஊரிலே இரண்டு மாசம் வரையில் நின்று மறுபடி இங்கே வந்தார். வந்தவுடன் சுந்தரேஸ்வரக் குருக்களைப் புனர்விவாகம் செய்துகொண்டே யாழ்ப்பாணம் வரவேண்டுமென்று சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கவர் சம்மதியாமல் மறுத்தார். நானும் செட்டியாரும் சொல்லியது நீர் கட்டாயம் விவாகம் செய்ய வேண்டியது என்று சொல்லி தானே விவாகச் செலவைத் தருகிறேனென்றும் செட்டியார் சொன்னார்.

சுந்தரேசுவரக் குருக்களும் இதற்குடன்பட்டுச் செட்டியாரிடம் காசு வாங்கிக்கொண்டு நானும் எனது சம்சாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் திருவையாற்றுக்குப் போய் அங்கே பஞ்சநதேஸ்வரக் குருக்களின் இரண்டாவது புத்திரி அமிருதாம்பிகை அம்மாளை விவாகம் செய்து அவ்விடம் ஒருமாசம் வரையிலிருந்து மறுபடி இராமேசுவரம் வந்தோம்.

செட்டியாரைக் கண்டு யாழ்ப்பாணம் எப்போ போவது என்று கேட்டேன். அதற்கவர் பரிசாரகப் பிராமணரைச் சம்பாதித்துக் கொண்டு புறப்படுகிறதென்று சொன்னார். நான் மனதிலே யோசனை செய்து உத்தரகோசமங்கையிலே கலகமிருக்கிறபடியால் அங்கே போனால் பரிசாரகப் பிராமணரைக்கொண்டு வரலாமென்று சொன்னேன். அதைச்செட்டியார் கேட்டு நீங்களுமென்னுடன் வந்தால் இலகுவிற் கொண்டு வரலாமென்று சொன்னார்.

நானும் செட்டியாரும் உத்தரகோசமங்கைக்குப் போய் அங்கேயுள்ள நாலு வடகலை வைஷ்ணவப் பிராமணர்களை சம்சாரத்தோடு அழைத்துக்கொண்டு இராமேசுவரம் வந்தோம்.

செட்டியார் எங்களெல்லோரையும் எங்கள் விடுதியில் விட்டு எங்களுக்குச் செலவுக்கு ரூபாய் தந்துவிட்டுச் சேதுவிலே போய்த் தீர்த்தமாடிக் கந்தமாதனத்தைத் தெரிசித்து இராமலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தனி அம்மாளையும் தெரிசித்து வந்து எங்கள் விடுதியிலேயே இருந்தார். இரண்டு நாள் சென்றபின் யாழ்ப்பாணம் போவோமென்று யோசனை செய்தார். அப்படி யோசனை செய்து கொண்டிருக்கும் போது முத்துமாணிக்கம் செட்டியார் கப்பலில் கொழும்பு சென்றிருந்த தைரியலட்சுமி என்று பெயர் தரித்த கப்பல் பாம்பன் வந்துவிட்டதாக மாலுமி வழியாலறிந்து சந்தோஷமடைந்து என்னோடு நாங்களினி யாழ்ப்பாணம் போவதற்குப் புறப்படுவோமென்று சொன்னார். நானுமதற்குடன்பட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரேசுவரக்குருக்களும் சமுசாரமும் வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் அவர்களின் சமுசாரங்களும் பாம்பனை அடைந்தோம்.

செட்டியாரும் அவர் சமுசாரமும் பிள்ளைகளும் அவர்களது தேசத்திலிருந்து கொண்டுவந்த விக்கிரங்களையும் கொண்டு பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை அடைந்தார். எல்லோரும் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காலை ஏழு மணிக்குக் கப்பலில் ஏறிப் பிரயாணமாய் சேதுக் கரையைக் கண்டு, அது மறைந்த பின் கச்சைதீவு கண்டு அது மறைய பின் சஞ்சீவி என்னும் பொற்சீந்திலையுடைய நீடித்த ஆயுளைத் தாங்கும் மானிடரைப் பெற்ற பூமியாகிய நெடுந்தீவு கண்டு அது மறைய நாகர்தீவு பப்பரவாகன் சல்லியன் குடியில் எழுந்திருக்கும் நாகபூஷணி அம்மாள் கோயிலில் கோபுர சிகரத்தையும் நாகஞ் சுற்றிய கல்லையும் கண்டு பின் நாகேசுரன் கோயிலைக் கண்டு அதன் பின் அனலைதீவு கண்டு பின் எழுகடல் ஒருமித்துச் சேரும் சுளிக்குப் பாகமாயிருக்கும் எழுவதீவு கண்டு அதன்பின் பவளப்பூச்சிகளாலும் வருணராசன் முருகைக் கற்களாலும் உண்டுபண்ணிய காரைதீவு கண்டு ஊர்காவற்றுறை என்னும் துறைமுகத்தையடைந்து கப்பலை விட்டிறங்கினோம்.

ஊர்காவற்றுறையிலே நின்றுகொண்டு செட்டியாரவர்கள் எங்கள் வரவையும் தனது வரவையும் ஏவலாளர்களால் இராசாவுக்கு அறிவிக்க அரசர் சதுரங்க சேனைகளுடன் செட்டியாரையும் எங்களையுமடைந்து எங்களை முத்துப் பல்லக்கிலும் தானும் செட்டியாரும் முத்துச் சிவிகைகளிலுமமர்ந்து சதுரங்க சேனைகளுடனும், சகல வாத்தியங்களுடனும் இராசமாளிகையை அடைந்தோம். எங்களை முத்துப்பல்லக்கிலிருந்து இறங்குபடி செய்து, தாங்களுமிறங்கி இராச மாளிகையை அடைந்து எங்களுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து வேண்டிய திரவியங்களும் தந்து மறுபடியும் எங்களை முத்துப்பல்லக்கிலேற்றி தாங்களும் முத்துச்சிவிகைகளிலேறி வியாவில் என்று வழங்கும் பதியையடைந்து புதிதாய்க் கட்டப்பட்ட ஐயனார் கோவிலுக்கு ஈசான்ய பாகத்திலே எங்களுக்காகவும் கட்டப்பட்ட மடவழாகத்திலே எங்களை இறக்கித் தாங்களுமிறங்கி நாங்கள் ஸ்நானம் பூசை போசனம் முடிந்தபின் அவர்கட்குமன்னங் கொடுத்து அவர்கட்கு வேண்டிய உபசரணைகள் செய்து அனுப்பினோம். சில நாட்கள் சென்றபின் இராசா எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னார். தாங்களிருவரும் இராச சபையை அடைந்து அரசர்க்கு முன்பாக இருந்து அதாவது முதல் நாளிகேர தாடனம் பண்ணினோம். நாளிகேரதாடனம் பண்ணும்போது கெவுளி சொல்லியது. கெவுளிச் சாஸ்திரம் பார்த்தோம். அது நல்லாயிருக்கவில்லை. கெவுளியின் பலனை அரசர்க்குச் சொன்னோம். இராசாவும் இன்றையிற் தினத்தைவிட்டு இன்னொரு நாளைக்கு முகூர்த்தம் வைப்போமென்று எங்களை அனுப்பிவிட்டார்.

ஒரு மாசம் சென்றபின் மறுபடியும் எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னார்கள். நாங்களுமவ்விடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் அரசர் முகதாவில் முகூர்த்தம் வைக்க ஆரம்பித்து நாளிகேரதாடனம்செய்தோம். நாளிகேரம் கவிழ்ந்து போய்விட்டது அதையும் அரசர்க்கறிவிக்க அரசர் வெகுவாய் யோசனை செய்துவிட்டு.

கோயில்கட்டி வெகுகாலமாகி விட்டது. ஆனபடியால் கும்பாபிஷேகம் செய்யாமலிருக்கிறதே துர்ச்சகுனமாய் வந்தது போலும். ஆனபடியால் முகூர்த்தம் வைப்பதே நல்லது. மறுபடி ஒரு தேங்காயெடுத்து உடைத்து வைத்து முகூர்த்தம் வைக்கத் தொடங்கினோம். அதாவது, பிரபவாதி 36 பிலவ வருடம் வைகாசி மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமையும் திருவோண நட்சத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்திலே செய்யலாமென்று சொன்னோம். அதை இராசா கேட்டு முத்துமாணிக்கம் செட்டியாரை ஸ்தானிகராய் நியமித்து அவர் விருப்பப்படி கும்பாபிஷேகத்தைச் செய்யும்படி சொன்னார்கள்.

முத்துமாணிக்கஞ் செட்டியாருமிதற்குடன்பட்டு எங்களால் வைக்கப்பட்ட முகூர்த்தத்திலே கும்பாபிஷேகத்தைச் செய்து பூசை உற்சவம் முதலியவைகளும் கிரமமாய் நடத்தி வந்தோம். வியாவில் ஐயனார் கோவில்கும்பாபிஷேகஞ்செய்ததினம் கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றுமூன்று சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைஞ் நூற்றுறுப் பதினெட்டு. பிரபவாதி வருஷம் முப்பத்தைந்தாவது பிலவ வருடம் வைகாசி மாசம் 25 ந் திகதி நடைபெற்றது,

சொற்பகாலஞ் சென்றபின் மகாராசா அவர்களால் எங்களிருவருக்கும் செப்புப்பட்டயம் தரப்பட்டது. அந்தச் செப்புப்பட்டயமாகிய சாதனத்திலே எழுதிய வாசகம் இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் வடமேற்குப் பக்கமாய் சமுத்திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலே வியாவில் என்னுமிடத்தில் இந்தியாவில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வந்து இப்போ காரைதீவிலே ஊர்காவற்றுறையில் இருக்கிற வரராம சேதுமகாராசா மகன் குளக்கோட்டுமகாராசாவாகிய என்னால் முற்சொல்லிய இடத்திற் கட்டுவிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்குப் பூசகராயிருக்கிற திரு உத்தரகோசமங்கையிலிருந்து என்னால் அழைக்கப்பட்ட மங்களேசுவரக் குருக்களுக்கும் எழுதுகிற சாதனம்; கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றைந்து. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைந்நூற்றிருபது. பிரபவாதி வருஷம் முப்பத்தேழாவது சோபகிருது வருஷம் சித்திரை மாசம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரம் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாதனம். மேலே சொல்லப்பட்ட குருக்கள்மார் இருவருக்கும் தங்களிஷ்டபபடி நித்திய நைமித்தியம் காமிபம் முதலிய சகல கிரியைகளையும் செய்யவும் செய்விக்கவும் புராணம் வாசிக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துமாணிக்கஞ் செட்டியாருக்குப் பிறகு ஸ்தானிகராகவும் கோயி லுக்குரிய சகல காரியங்களையும் செய்கிறவர்களாகவும் தங்களிஷ்டப் படி செய்விக்கிறவர்களாகவும் தத்துவம் பெறுகிறார்கள். இத் தத்துவ மானது என்றும் எனது சந்ததியாராலும் அழிக்கப்படாது குருக்கள் மாருக்கும் அவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் மேலே சொல்லிய தத்துவமானது குளக்கோட்டுமகாராசா என்னும் பெயரையுடைய நான் எனது கையொப்பமிட்டுக் கொடுக்கிறேன். எனது கையொப்பம் குளக்கோட்டுமகராசா. முதலாஞ் சாட்சி சி. முத்துமாணிக்கஞ் செட்டியார். இரண்டாஞ் சாட்சி வைத்தியனாதபிள்ளை இராமுப் பிள்ளை மூன்றாஞ் சாட்சி நாராயணபிள்ளை கந்தப்பிள்ளை. இவர்கள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முடித்து ஒரு பிரதியை நான் எடுத்துக்கொண்டு மற்ற இரண்டையும் இரண்டு குருக்கள் மாரிடமும் கொடுத்தேன்.

அவர்களும் தங்கள் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டார்கள். இராசா அவர்கள் தந்த செப்புப் பட்டயத்தை நாங்கள்பெற்றுக் கொண்டு கோயிற்பூசையையும் மிக ஒழுங்காய் நடத்திவந்தோம். சொற்பகாலஞ் சென்றபின் எனக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார் கள் முதலாவது புத்திரி மங்களாம்பிகை அம்மாள். இரண்டவது புத்திரன் சூரியநாராயணக் குருக்கள். மறுபடியுமிருவரும் பூசை செய்து கொண்டுவந்தோம். எனது மகனுக்கு விவாகம் செய்கிறதற்கு இந்தியாவிற்குப் போய் இராமனாதபுரத்திலேயுள்ள சொக்கனாத கோயிலருச்சகர் வேதாரண்யேசுவரக் குருக்களின் இரண்டாவது மகன் சேதுமாதவக் குருக்களுக்கு நமது பெண்ணை விவாகம் செய்து விட்டு வந்தேன்.

மறுபடியும் சிறிது காலஞ் சென்றபின் சுந்தரேசுவரக் குருக்களைப் பூசைக்கு வைத்துவிட்டு நானும் மனைவியும் மகனும் இந்தியாவுக் குப் போய் இராமனாதபுரத்தை அடைந்து மகனையும் மருமகளை யும் அழைத்துக்கொண்டு கும்பகோணம் போய் உத்தரகோசமங்கை யிலிருந்து என்னோடு புறப்பட்டுப்போன அருணாசலக் குருக்கள் மூன்றாம் புத்திரி உருக்குமணியம்மாவை விவாகம்செய்து அவ்விடம் இரண்டுமாசம் வரையிருந்தோம். எங்களோடு உத்தர கோசமங்கை யிலிந்து புறப்பட்ட இராமலிங்கக் குருக்கள் எவ்விடம் போனாரென்று அருணாசலம் குருக்களைக் கேட்டேன். அவரதற்கு எனது சம்சாரம் கும்பகோணத்திலேயுள்ளது. நான் இங்கே வந்துவிட்டேன். அவரது தாய் செருத்தணியிலேயுள்ளவர் அவரும் சம்சாரமும் பிள்ளை களும் அங்கே போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். மறுபடி நானும் சம்சாரமும் மகளும் மருமகனும் மகனும் மருமகளும் கும்பகோணத்தைவிட்டுப் புறப்பட்டு இராமனாதபுரம் வந்து அங்கே மகளையும் மருமகனையும் அனுப்பி விட்டு நாங்கள் நால்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வந்தோம். இங்கே வந்து எங்கள் பூசைப்பங்கையும் ஊர்க்காரியங்களையும் நானும் எனது மகனும் பார்த்துவந்தோம். சுந்தரேசுவரக் குருக்களும் எங்களோடு ஒற்றுமையாய் தனது பங்கைப் பார்த்து வருகிறார். இப்படியாக இருபத்தைந்து வருடங்களாகப் பார்த்து வருகிறோம். இவ்வளவும் மங்களேசுவரக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு இப்பொழுது வயது அறுபத்தெட்டு.

இப்படியாக நாங்கள் மூவரும் பூசையையும் ஊர்க்காரியங்களையும் பார்த்து வந்தோம். சில வருஷம் சென்றபின் எனது பிதா மங்களேசுவரக் குருக்கள் இறந்துவிட்டார். நானுமெனது தமையனாரும் கோயிற்பூசை செய்து வரும் காலத்தில் தமிழ் இராச்சியம் போய்விட்டது. முத்துமாணிக்கம் செட்டியாரும் இறந்துவிட்டார் போர்த்துக்கீசர் என்னும் பறங்கியர் கிறீஸ்து வருஷம் 1618 ம் ஆண்டு காலயுத்திவருஷம் ஊர்காவற்றுறைக்கு வந்தார்கள். அநேக சைவ சமயக் கோயில்களை இடித்துப்போட்டார்கள். இங்கேயுள்ள ஐயனார் கோயிலை இடிக்க வந்து கோபுரவாசலிற் கதவைத் திறக்கப்போனார்கள். அவர்களின் வாயிலிருந்து இரத்தம் புறப்பட்டு இறந்து விட்டார்கள்.

அந்தப் பயத்தினால் மறுபடி கோயிலை இடிக்க வரவில்லை. பறங்கியரசு வந்து ஒரு வருஷத்தின் மேல் பெரிய அம்மை நோய் வந்தது. அந்த நோயால் ஊர்களிலனேகம் பேர் இறந்து விட்டார்கள். அந்த நேரத்தில் எனது தமையனார் சுந்தரேசுவரக் குருக்களும் அவர் மனைவியும் இறந்து விட்டார்கள். இங்கே வேறு குருக்கமார் ஒருவருமில்லை. நானும் வடகலை வைஷ்ணவப் பிராமணருமாக இருந்தோம். சுந்தரேசுவரக் குருக்களுக்குப் பிள்ளையில்லாத படியால் அவரது சந்ததி அவ்வளவில் அற்றுப்போயிற்று. அம்மைநோய் அகலுவதற்காக முத்துத் தாண்டவரென்பவர் மணற்காடு என்றழைக்கப்படும் இடத்தில் ஓர் முத்துமாரி ஆலயத்தை ஒரு மாசத்திற் கட்டி முடித்து என்னைக் கொண்டு கும்பாபிஷேசம் செய்வித்துத் திருவிழா வேள்வி முதலியவைகள் செய்து முடிய அம்மைநோயும் குறைந்துவிட்டன. பறங்கிகள் தங்கள் சமயத்தின்படி எத்தனையோ ஆராதனை செய்தும் நோய் குறையவில்லை. ஆனபடியால் நாங்கள் செய்த வழிபாட்டைத் தடுக்க முயலவில்லை.

ஐயனார் கோயிற் பூசையையும் மாரிஅம்மன் கோயிற் பூசையையும் நானே செய்து வருகிறேன். சொற்பகாலம் சென்றபின் எனக்குக் கனகசபாபதிக் குருக்கள் பிறந்தார். பறுவதம் என்னும் பெண் பிள்ளையும் பிறந்தது. இவ்வளவும் சூரியநாராயணக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தகப்பன் சூரியநாராயணக் குருக்கள் இறக்கும் போது நானுமெனது சகோதரியும் தாயும் பரிசாரகப் பிராமணர்களுமே யன்றி வேறொருவரும் காரைதீவில் இல்லை. நானே இரண்டு கோயிற் பூசையையும் செய்து வந்தேன். கொஞ்சக்காலத்தின் பின் எனது சகோதரிக்கு கீரிமலையிலே உள்ள சுப்பிரமணியக் குருக்களின் மகன் மகாதேவக்குருக்களை மணம்செய்து வைத்தேன். நானும் அவரது மகள் பறுவத அம்பாளை விவாகம் செய்தேன் நானுமெனது மைத்துனனுமாக இங்கேயுள்ள கோயிற் பூசையையும் ஊர்க்காரியங் களையும் பார்ந்து வந்தோம். பின்னர் போர்த்துக்கீச ராச்சியம் போய் ஒல்லாந்த ராச்சியம் வந்தது, அவர்கள் கிறீஸ்து வருஷம் 1658 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் ஊர்காவற் றுறையைப் பிடித்தனர். ஊர்காவற்றுறை பிடிபட்ட ஒரு மாசத்திற் குள் அநேக சைவசமயக் கோவில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்கவந்தபோது நாலுபேர் கண் தெரியா தவர்களாயும் இரண்டுபேர் நடக்கமாட்டாதவர்களாயும் போனார் கள். இது நடந்து கொஞ்சக்காலத்தின் பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர். அவர்கள் போனபிற்பாடு விக்கிரகங்கள் எல் லாவற்றையும் நில அறையில் வைத்து இரகசியமாய்ப் பூசை செய்து வரும் போது ஒருநாள் வந்து கோவிலையும் இடித்து கடலுக்குள்ளே ஓர் கோட்டையையும் கட்டினார்கள்.

அதன்பின் நில அறையில் விக்கிரகங்களுக்குப் பூசை செய்வதை யறிந்து சுவாமி எல்லாவற்றையும் கோயிற் சாமான்கள் சகலதையும் கிணற்றுக்குள்ளே போட்டு ''வீரன்'' என்பவனையும் வெட்டிப் பலி கொடுத்துப் போய்விட்டார்கள். தேரையும் வாகனங்களையும் கட லிலே விட்டுவிட்டார்கள். ஆபரணங்களெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டார்கள்.

இப்படி இருக்கும் காலத்தில் எனக்குப் பிள்ளை பிறந்தது. அவர்களுக்கு அறிவிக்கவேண்டிய கட்டளைச் சட்டமிருப்பதால் அவர் களுக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து தண்ணீர் தெளித்து ''தாமன்'' என்னும் பெயர் வைத்துப் போய்விட்டார்கள். குருக் கள் என்று பெயர் வைக்கப்படாதெனவும் சொன்னார்கள். எங்கள் சாதியில் குரு இருக்கிறதேயன்றி மற்றச் சாதியில் இருக்கப்படா தெனவும் சட்டம் வைத்து இருந்தபடியால் எங்களுக்குரிய கிரியை களை இரகசியமாய் முடித்து ''தாமோதரஐயர்'' எனப்பெயர் வைத்து வளர்த்து வந்தேன்.

சைவசமயம் என்ற பேச்சு அவர்களின் காதிற்கேட்கப்படாது. வீபூதியும் பூசப்படாது. நான் பகலில் எங்களுக்குரிய காணிகளை உழுதுவித்து வேலை செய்து பொழுது போனபின் வீடுவந்து இரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியமாய் வீட்டுக்குள் இருந்து பூசை முதலியவைகளை முடித்துப் பின்பே சாப்பிட வேண்டும். இந்தக் கொடுமைகளைத் தாங்க ஏலாது பரிசாதகத்திற்கு வந்த வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் சமுசாரமும் பிள்ளைகளும் இந்தியாவுக்குப் போய்விட்டார்கள். நான் ''வியாவில்'' என்னும் இடத்தைவிட்டு ''மணற்காடு'' மாரி அம்மன் கோயிலடியில் வந்து இருந்தேன். மாரிஅம்மன் கோயிலையும் இரண்டுமுறை இடிக்க வந்தும் அம்மை நோயின் பயத்தால் இடிக்காமல் போய் விட்டனர்.

என்னையும் பூசைசெய்யப்படாதெனத் தடுத்தனர். நான் ஒரு நேரப் பூசை தவறினாலும் முத்துமாரி அம்மை வருவிப்பள். அதற்குச் சாட்சி கோயிலிடிக்க வந்தபோது உங்களுக்குத் தெரியும். உங்களுக்கேயன்றி இங்கேயுள்ள மற்றவர்களுக்கு அம்மை வந்ததில்லை. இந்தக் கோயிற் பூசைக்காகவே நான் இங்கே இருக்கிறேன். அல்லாவிடின் இந்த ஊரை விட்டுப் போய்விடுவேன் என்று சொல்ல ஒன்றும் பேசாது போய்விட்டார்கள்.

பின் எனது மகனுக்கு விவாகம் செய்ய நினைத்து கீரிமலையிலே உள்ள எனது சகோதரியின் மகள் 'நாராயணி அம்மாளை' விவாகம் முடித்துநானும் மகனுமாய்ப் பூசை செய்து வந்தோம். அந்தநாளில் மாரியம்மன் கோயிலைக்கட்டிய முத்துத்துத்தாண்டவ முதலியார் மகன் இராசரத்தின முதலியார் அவர் மகன் வரராசசிங்க முதலியாரால் எனது மகனுக்கு ஓர் உறுதி எழுதப்பட்டது.

அவ்வுறுதி எப்படியெனில், 1749 ஆம் ஆண்டு பங்குனி மாதம் திங்கட்கிழமை பூருவபக்கத்திருதிகையும், சோதி நட்சத்திரமும் கொண்ட சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாசனத்தின் வாசகம்.

மேற்குறிந்த ஐயமார்களே தங்களிஷ்டப்படி இந்தக் கோயிலிலே புராணம் வாசிக்கவும், பூசை திருவிழா நடத்தவும், வேள்வி செய்யவும் அதிகாரமுடையவர்களாய் இருக்கிறார்கள். இக்கோயிலில் ஆராதனைக்காக வரும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் பணத்தை குறித்த ஐயமாரே ஏற்று அதை இக்கோயிலின் விருத்திக்காக உபயோகிக்கும் அதிகாரமுடையவர்களாக இருக்கிறார்கள். இவ்வதிகாரமானது இவருக்கும் இவர் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ள வரைக்கும் வரராசசிங்க முதலியாராகிய என்னால் தாமோதர ஐயருக்கு கொடுக்கப்பட்டது.

வரராசசிங்க முதலியார் கையொப்பம்

சாட்சிகள்: சங்கரன் சேதுவன்
சங்கரன் கதிர்காமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உறுதி எழுதி முடிந்த சிறிது காலத்தின் பின் எனது மக னுக்குப் பிள்ளைகள் பிறந்தன. முதலாவது மகன் - கண்டோ பண்டித ஐயர்.

ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். எனது மூத்த பேரனுக்கு மேருகிரி ஐயருடைய வம்சத்திலே உள்ள கணபதி ஐயருடைய மகள் உமை அம்மாவை விவாகம் செய்து வைத்தேன். இவ்வளவும் கனக சபாதிக்குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எழுபத்திரண்டு.

எனது பேரன் தாமோதர ஐயர் அவருடைய பிள்ளைகள், ஐந்து பேர். அவருடைய முதல் மகன் கண்டோபண்டித ஐயராகிய நான் எனது தகப்பன் மற்ற நால்வரில் இரண்டாவது மகன் புங்குடுதீவுக்கும் மூன்றாவது மகன் சுன்னாகத்திற்கும் நாலாவது மகன் அராலிக்கும் ஐந்தாவது மகன் இணுவிலுக்கும் போய்விட்டார்கள். எனது தகப்பன் காலத்திலே ஒல்லாந்தர் இராச்சியம் போய் இங்கிலீசு இராச்சியம் 1795 இல் வந்து விட்டது. எனது தகப்பனா ருக்கு எனது பிரபிதாமகர் கனகசபாபதிக்குருக்கள் விவாகம் செய்து வைத்தார். எனது தகப்பனுக்கு நாலு பிள்ளைகள்.

(க) முத்தையா

(உ) இரங்கையர்

(ங) சுப்பையர்

(ச) தெய்வதயானை அம்மாள்

எனது தகப்பனாகிய கண்டோ பண்டித ஐயர் முத்தையாவகிய எனக்கு கோதாவரியிலே இருந்துவந்த மேருகிரி ஐயருடைய சந்ததியிலே உள்ள சுப்பையருடைய (க) மகள் இலட்சுமி அம்மா வையும் எனது தம்பி இரங்கையருக்கு (உ) மகள் பாறுவதி அம்மா வையும் எனது இரண்டாவது தம்பி சுப்பையருருக்கு சுப்பையரு டைய மகள் சானகி அம்மாவையும் எனது சகோதரி தெய்வதயானை அம்மாவுக்கு சுப்பையருடைய மகன் கதிரேச ஐயரையும் விவாகம் செய்து வைத்தார்.

நான் விவாகம் செய்து (கரு) வருஷம் வரையில் பிள்ளையில் லாதிருந்தது நான் வெகுமனத்துக்கமுடையவனாய் இருக்கும்போது திருச்செந்தூருக்குப்போய், கந்தஷட்டி விரதம் இருப்பதாக எனது தகப்பனாருக்கு அறிவித்தேன். அவர் எங்கள் சந்ததித் தலைவரா கிய மங்களேஸ்வரக்குருக்கள் திரு உத்தரகோசமங்கையிலிருந்து வரும் போது ஆவ்விடம் வைத்துவிட்டு வந்த சுவாமியின் ஆபரணம் முத லிய சகல சாமான்களையும் எடுத்துக் கொடுத்துவிட்டு வரும்படியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆங்கே மறைத்துவிட்டு வந்தமையால் இங்கே அவர் பட்ட கஷ்டம் முதலியவற்றையும் "சிவசொத்து குலநாசம்" என்பதற்கு சந்தேகமில்லை என்பதையும் இன்னும் அனேக புத்திமதிகளையும் சொல்லி ஏட்டையும் தந்து எனக்கு வேண்டிய பொருளும் தந்து, போய்வருமளவும் என்னோடு ஆட்களையும் தந்து எனக்கும் என் சமுசாரத்துக்கும் ஆசிர்வாதம் செய்து ஊர்காவற்றுறைவரைக்கும் எங்களோடு வந்து எங்களைக் கப்பலேற்றி விட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

நாங்கள் பிரயாணமாய்ப் பாம்பன் வந்து பாம்பனிலே இறங்கி, இராமேசுரத்துக்குப் போய் அங்கேயுள்ள ஆரியப் பிராமணப் பிள்ளையை அழைத்துக் கொண்டு (கரு) மைல் தூரமுள்ள சேதுவையடைந்து, ஆரியரைக் கொண்டு சங்கற்பம் செய்வித்து தீர்த்த ஸ்நானம் செய்து இராமேசுரத்தையடைந்து, இராமலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தனி அம்மாளையும் தெரிசித்து, சேதுமாதவரையும் சேதுகாவலரையும் தெரிசித்து அவ்விடத்தில் ஐந்து நாளிலிருந்து ஐந்தாவது நாள் உவதீர்த்தத ஸ்நானமும் கோடி தீர்த்தமும் ஸ்நானமும் செய்து ஆசாரியருக்கு என்னாலியன்ற தெட்சணையும் கொடுத்து அவரால் ஆசீர்வதிக்கப்பெற்று அந்த இடத்தை விட்டு நீங்கி மறுபடியும் பாம்பன் வந்து ஓடம் வழியாய் வெற்றிலை மண்டபம் சேர்ந்து திருப்புரானி தெற்பசயனம் போய் அங்கிருந்து பிரயாணமாய் உத்தரகோசமங்கையை அடைந்தோம்.

ஆதிசிதம்பரக் குருக்கள் வீட்டிலேயே விடுதி எடுத்து இருந்தோம். இருக்கும்போது ஆங்கேயுள்ள குருக்கமார்களுடைய சரித்திரத்தை விசாரித்தேன். ஆதிசிதம்பரக்குருக்கள் சொல்லுவது - முன் முப்பத்திரண்டு வீட்டுக்காரர்களிலிருந்ததாகவும், இங்கே கலகம் நடந்தபோது பதினெட்டு வீட்டுக்காரர் இன்ன இடம் என்பது தெரியாமற் போய்விட்டார்களென்றும் மறுபடி (கஉ) வீட்டுக்காரர் இருந்ததாகவும் அப்போ நான்கு வீட்டுக்காரர் இவ்விடத்தை விட்டு வெளிக்கிட்டு ஒரு பகுதியார் கும்பகோணத்திற்கும் இன்னொரு பகுதியார் செருத்தணிக்கும் இரண்டு வீட்டுக்காரர் யாழ்ப்பாணமும் போய்விட்டார்களென்றும் இங்கேயுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இப்போ இங்கே இருப்பவர்கள் ஏழு வீட்டுக்காரர்கள் என்பதாகவும் சொல்லி இதெல்லாவற்றையும் நீர் ஏன் விசாரிக்கிறீர் என்று என்னையும் கேட்டுவிட்டு என்னுடைய கோத்திர சூத்திரத்தையும் விசாரித்தார். நானும் என்னுடைய கோத்திர சூத்திரத்தைச் சொல்லிச் செப்புப் பட்டயத்தையும் எடுத்துக் காண்பித்தேன். அதன் பிற்பாடு அவர் என்னைத் தங்களோடு சமபந்தியாய் வைத்து போசனஞ் செய்தும் மிக்க மரியாதையும் வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அங்கேயுள்ளவன் என்பதை அறிந்தபிற்பாடு அங்கேயுள்ள சனங்களுக்கு இருந்த சந்தோஷம் அளவில்லை. நான் கொண்டு போன ஏட்டையும் வாங்கிப் பார்த்து சுவாமியின் ஆபரணம் முதலிய சாமான்கள் இருக்கிற இடத்தையும் திறவுகோல்கள் வைத்த இடத்தையும் அறிந்து என்னை அச்சாமான்களை எடுத்துத் தரும்படி கேட்டார்கள். நானுமதற்குடன்பட்டு முத்து இராமலிங்கம் என்னும் பெயரையுடைய சேதுபதி மகாராசாவை அழைப்பித்து அங்கேயுள்ள குருக்கள்மார் மற்றுஞ் சனங்களெல்லாரையும் அழைப்பித்து மங்களேசுவர சுவாமிக்கும் மங்களாம்பிகை அம்மனுக்கும் விஷேசபூசை அபிஷேகம் செய்த பிற்பாடு மகாமண்டபத்தில் ஈசானிய மூலையில் இருக்குந் தூணில் யானைக்காசு முத்திரை இருப்பதாகவும் அதுக்குள்ளே துவாரஞ் செய்து திறவுகோல் வைத்திருப்பதாகவும் ஏட்டிலே எழுதியிருக்கிறது என்பதை சேதுபதிக்கு அறிவித்து சேதுபதியும் நானும் அங்கேயுள்ள குருக்கள்மார் முதலிய எல்லோரும் மகா மண்டபத்தில ஈசானிய மூலையில் இருக்குந் தூணுக்குச் சமீபமாகப்போய் தூணில் யானைக்காசு முத்திரை இருப்பதை எல்லாருமாகப் பார்த்து யானைக்காசு முத்திரையை நானே யுடைத்து அதன் மேல் அரக்கு மெழுகு எடுத்து அதன்மேல் திறவுகோலை எடுத்து மங்களேசுவரசுவாமி கோயிலில் தெற்குப் பக்கத்திலே இருக்கிற போக்கை அறிந்து அங்கே போய் போக்கைத் திறந்து போக்குக்குள்ளே எல்லாரும் போய் இரும்புப் பெட்டகத்தைத் திறந்தபோது அதற்குள்ளே சிறு தயிலாப் பெட்டி இருப்பது கண்டு அதை எடுத்துத் திறந்து பார்க்கையில் தங்க ஆபரணங்கள், வெள்ளி ஆபரணங்கள், பதக்கங்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன். முத்து மாலைகளும் பட்டுக்களும் பழுதாய்விட்டன. குடை, கொடி, சுருட்டி முதலியவைகளும் பழுதாய் விட்டன. செப்பு, இரும்பு, பித்தளை, வெண்கலம் முதலிய சாமான்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன். எல்லாச் சாமான்களையும் சுவாமி சன்னிதானத்திற் கொண்டுபோய் நகை முதலியவைகளை சுவாமிக்குச் சாத்தி மகா உற்சவம் நடத்திய பிற்பாடு ஆபரணம் முதலிய சகல சாமான்களையும் சேதுபதிராசா முகதாவில் ஒப்படைக்கும்போது உமது முன்னோர் இருந்து நடத்தினபடியே நீரே இருந்து இந்தச் சாமான்களையும் வைத்துக்கொண்டு இருக்கும்படியாகவும் எமது பிள்ளைகளுக்குப் பூசைப்பங்கைத் தருகிறதாகவும் இராசாவும் குருக்கமார்களும் கேட்டார்கள். இப்போ தம்முடைய பூசைப்பங்கை மற்றக் குருக்கள்மார்கள் செய்து தருவதாகவும் என்னைக் கேட்டார்கள். நானதற்குச் சொல்லியது யாத்திரை செய்வதாக வந்தேனேயன்றிப் பூசைப்பங்குக்காக வரவில்லையென்றும் இந்தச் சாமான்களை நான் அறிந்துகொண்டு எடுத்துத் தராமற் போனால் எனக்கு மகாபாதகம் வருமென்றும் நான் சொன்னேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியதை எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். இன்று முதலாக எனது பேருக்கு மாசம் மாசம் அருச்சனை செய்யவேண்டுமென்று அதற்குரிய காசையும் கொடுத்து மறுபடியும் நாலைந்து நாள் அவ் விடத்திலிருந்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாகும்போது அங்கேயுள்ளவர்கள் என்னைவிடமன மில்லாதவர்களாயிருப்பதை அறிந்து மறுமுறை வருவதாகவும் இப்போ திருச்செந்தூருக்குப் போகிறதாகவும் அவர்களுக்குச் சொல்லி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அவர்களுடைய ஆசீர்வாதத்தையும் நான் பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு நீக்கித் திருச்செந்தூருக்குப் போய் அங்கேயுள்ள திரிசுதந்தரப்பிரா மணர்களாகிய சுப்பையர் வீட்டில் விடுதி எடுத்து அவரை அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் போய் அவரைக் கொண்டு சங்கற்பஞ் செய் வித்து கந்த புட்கரணி, வதனாரம்பம முதலாகிய இருபத்திநாலு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து கோயிலுக்குள்ளே போய் சுப்பிர மணியரையும் சண்முகரையும் தரிசித்து சங்கற்ப பூர்வமாய் ஸ்கந்த சஷ்டி விரதத்தை ஆரம்பித்து நானும் எனது சம்சாரமும் ஆறு நாளாய் உபவாசமிருந்தோம். ஆறு நாளுஞ் சென்ற பிற்பாடு அங்கே ஓர் மடங் கட்டுவிக்க வேணுமென்று நினைத்து பஞ்சிக் காட்டிலிருக் கும் தேவர் சந்ததியாரில் ஒருவர் மாறலாய் கிரயத்திற்கு நிலம் வாங்கிச் சாதனம் நிறைவேறியபின் அந்த இடத்தில் ஒரு மடம் ஸ்தாபித்து அம்மடத்திற்கு திரிசுதந்திரப் பிராமணரில் ஒருவராகிய சுப்பையரை தம்பதி சமேதராய் அந்த மடத்திலிருத்தி மடத்தைத் தருமசாதனஞ் செய்து கோயி லுக்கு அருச்சனைக் கட்டளை வைத்து சண்முகரையும் சுப்பிரமணி யரையுஞ் தரிசித்து அவ்விடத்தைவிட்டு நீங்கி திருப்பெருங்குன்றம் வந்து சண்முகப்பெருமான் திருமணக்கோலத்தைக் கண்டு தெரிசித்து பேரானந்தத்தை அடைந்து அவ்விடம் விட்டு நீங்கி மதுரைக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியையும் கண்டு தெரி சித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீரங்கத்தை அடைந்து அரங்கப் பெருமானைத் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி திருவானைக் காவை அடைந்து ஐம்புகேசுரரையும் அகிலாண்டேசுவரியையுங் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி வைத்தீசுவரர் கோயிலுக்குப் போய் வைத்தீசுரரையும் வாலாம்பிகையையும் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீர்காழிக்குப் போய் பிரமபுரீசுரரையும் தோணியப்பரை யும் சட்டநாதரையும் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலூட்டிய பிரதிமையையுங் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சிதம் பரம் போய் நடராசர் சன்னிதானத்தை அடைந்து நடராசரையும் மாணிக்கவாசகருடைய மோக்ஷமாகிய இரகசியத்தையும் கண்டு தரிசித்து கனகசபாபதியையும் படிகலிங்கத்தையும் தரிசித்து மறுபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாசலிங்கத்தையும் உமையம்மையாரையும் சிவகாமியையும் தரிசித்து தில்லைக்காளியையும் இளமையினார் கோயிலுக்குப்போய், அங்கேயுள்ள சுவாமிகளையும் தரிசித்து தீக்ஷிதரால் அன்னம் அளிக்க அன்னத்தைப் புசித்து அவ்விடத்தில் பத்துநாளிருந்து அவ்விடத்தை விட்டு நீங்கி இராமநாதபுரம் வந்து சேதுபதி மகாராசாவை அடைந்து மகாராசாவால் மரியாதை செய்யப்பெற்றும் அவர் கொடுத்த பட்டுப் பீதாம்பரம் ரூபாய் இவைகளையும் பெற்றுக்கொண்டு அவருக்கு ஆசீர்வதித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு இராமநாதபுரத்தை விட்டு நீங்கி மறுபடியும் உத்தரகோசமங்கைக்குப் போய் அங்கே நாலுநாளிலிருந்து அங்கேயுள்ள குருக்கள்மார்களோடு விருந்து சாப்பிட்டு அவர்களைச் சந்தோஷப்படுத்தி மங்களேசுவரரையும் மங்களாம்பிகையும் தெரிசித்து அவ்விடத்தைவிட்டு நீங்கும்போது, அங்கே உள்ளவர்கள் சந்தோஷமாக எங்களுக்கு ஆசீர்வாதம் செய்து அனுப்பினார்கள்.

பாம்பன் வந்து கப்பலேறி ஊர்காவற்றுறை வந்து கப்பலை விட்டிறங்கி களபூமியிலே இருக்கிற எனது தகப்பனார் வீட்டுக்குப் போய் அவர்களால் நாங்களெல்லோரும் ஆசீர்வதிக்கப்பெற்று இந்தியாவுக்குப்போய்வந்த சரித்திரம் எல்லாவற்றையும் விபரமாய்ச் சொல்லியும் தகப்பனார் வீட்டிலேயே கொஞ்ச நாளிருந்து மறுபடி மணல்காட்டிலே உள்ள எனது வீட்டில் வந்து இருந்தேன். இப்படி ஆறு வருஷம் திருச்செந்தூருக்குப் போய் கந்தஷட்டி விரதத்தை அனுஷ்டித்து ஆறாவது வருஷத்தில் சண்முகப்பெருமான் சந்நிதானத்தில் விரதம் உத்தியாபனம் செய்து முடித்து வீடு வந்து சேர்ந்தேன். சொற்பகாலம் சென்றபின் இந்தியாவுக்குப் போய் அநேக ஸ்தலங்களைக் கண்டு தெரிசித்து திருப்பெருந்துறைக்குப் போய் அங்கே மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்த இடத்தைப் பார்த்து அங்குள்ள திருப்பணி விஷேசத்தையும் மடந்தைநாதரையும் யோகம்பிகையையும் தரிசித்து அவ்விடத்திற் சில நாள் தங்கி அங்கேயுள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாய் வேதாரணியம் வந்து சுவாமி தெரிசனம் செய்து பிரயாணமாய்க் கோடிக்கரைக்கு வந்து முத்து மீனாட்சி என்னும் படகில் பிரயாணமாய் ஊர்காவற்றுறையை அடைந்து மணற்காடு என்னும் பதியில் அக்கிரகாரத்தை அடைந்து முதியோர்களை நமஸ்கரித்து, இளையோர்களை ஆசீர்வதித்து இருந்தேன்.

சிறிது காலத்திற்குப் பின் எங்கள் முதியோரால் ஸ்தாபிக்கப்பட்ட முத்துமாரி அம்மை ஆலயம் பழுதாயிருப்பதை அறிந்து அதைப் புதுப்பிக்க நினைந்து இலங்கையிலே அநேக இடங்களுக்குச் சென்று காசு வாங்கிவந்து திருப்பணி வேலை செய்து, மூலமூர்த்தி, உற்சவமூர்த்திகளை ஸ்தாபனம் செய்து துவாசரோகணத் திருவிழா வேள்வி முதலிய சிறப்புகளும் வெகுசிரத்தையுடனும் மன அன்பாயும் நடத்தி வருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தையருடைய பிள்ளைகள் இராமசாமி ஐயர், குமாரசாமி ஐயர், சீனிஐயர், என்னும் மூவர் இராமசாமி ஐயருடையமகன் சுந்தரரேசுவர ஐயர், இவருடைய மகன் — சரவணபவக்குருக்கள் இவருடைய வரலாறு.

1864 ஆம் ஆண்டில் ஜனனமான சிவஸ்ரீ சு. சரவணபவக் குருக்கள் அவர்கள் காரைநகர் கார்த்திகேயப் புலவர், வடலியடைப்பு வேலுப்பிள்ளை உபாத்தியாயர் ஆகியோரிடம் கல்வி கற்றார். வியாவில் ஐயனார் கோவிலிலும் மணற்காடு மாரியம்மன் கோவிலிலும் பூசகராக இருந்த பின்னர் ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் காரைநகர் சிவன் கோவிலிற் பூசகராகக் கடமையாற்றினார். இந்தியாவிலுள்ள வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று அங்கே ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்றார்; சிவன் கோவிலில், துவஜாரோகணம் முதலிய நைமித்திகக் கிரியைகளையும் செய்தார். இவர்...... ஆம் ஆண்டிற் சிவபதமடைந்தார்.

இவருடைய ஆறு பிள்ளைகளுள் ஒருவர் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் அவர்கள். 1988-03-10 திகதி ஜனனமான இவர் காரைநகர் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் தமிழையும், காரைநகர் இ. முருகேசஐயர், துணைவி அப்பாத்துரைக் குருக்கள், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகள், கந்தரோடை வைத்தியநாத சாஸ்திரிகள், அல்வாய் இராமலிங்கக் குருக்கள் ஆகியோரிடம் சமஸ்கிருதத்தையும் கற்றார். 1915 ல் காஞ்சிபுரத்தில் சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களால் ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்ற இவர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் பிரதம சிவாசாரியாராக 64 ஆண்டுகள் பணி புரிந்தார். இத் தேவஸ்தானத்தின் உயிராய், உள்ளமாய் உணர்வாய் இருந்து அரும்பயணியாற்றியவர் இவர்; தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஈழத்துச் சிதம்பரேஸ்வரனுக்கு அர்ப்பணித்தவர்.

ஈழத்துச் சிதம்பரத்தில் இவர் செய்த வேத ஆகம நெறி தவறாத கிரியைகளும், வேறு பல ஆலயங்களில் செய்வித்த கிரியைகளும் பல்லாயிரக் கணக்கானோரின் பாராட்டைப் பெற்றன.

அகில இலங்கைச் சைவ சமய குருமார் சபையின் தலைவராகப் பதின்நான்கு ஆண்டு கடமையாற்றிய கணபதீஸ்வரக் குருக்கள் அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கம், அகில இலங்கைப் பிராமண குரு சமூக சேவா சங்கம், அகில இலங்கைக் குருப்பிரம்ம வித்தியார்த்தி சபா, ஈழத்துச் சிதம்பரம் திருப்பணிச் சபை, காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் போஷகராகவும் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962 ஆம் ஆண்டில் இவருடைய மகத்தான சமயப் பணிகளைப் பாராட்டும் வகையில் அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சபையும் சைவாபிமானிகளும் இணைந்து இவருக்குப் பொன்னாடை போர்த்தி பொற்பதக்கம் சூட்டி ''வேதாகம கிரியா பூஷணம்'' என்ற பட்டத்தையும் வழங்கினர். அகில இலங்கைக் குருப்பிரம்ம வித்தியார்த்தி சபையினரால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் வேதாகம பாடசாலை இவரின் பெயரால் கணபதீஸ்வர குருகுல வித்தியாலயம் என வழங்கப்படுகின்றது.

1967 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13 ஆந் திகதி சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் ஈழத்துச் சிதம்பரேஸ்வரரின் திருவடி நிழலை அடைய, அத்தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சார்யரானவர் சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள் (தியாகராஜக் குருக்கள்)

## சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள்

சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் - சிவயோகசுந்தரம்பாள் தம்பதிக்கு மகனாக 1911-07-17 ல் இவர் பிறந்தார். அமரர் ஸ்ரீமதி சௌந்தராம்பாள் (மங்களாம்பாள்) சிவசுப்பிரமணியக் குருக்கள் (கந்தரோடை), அமரர் சிவஸ்ரீ க. இரத்தினசபாபதிக் குருக்கள் (காரைநகர்), பண்டிதர் பிரம்மஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் (காரைநகர்) அமரர் ஸ்ரீமதி திருவேங்கடம்மா விஸ்வநாதசர்மா (காரைநகர்) ஆகியோர் இவருடைய சகோதரர்கள்.

உரிய காலத்தில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற இவர். காரைநகர் - வலந்தலையிலுள்ள அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்றார். மிகச் சிறுவயதிலேயே தன் தந்தையாரிடம் சமஸ்கிருதத்தைக் கற்கத் தொடங்கி விட்டார்.

கோவிலிலே தந்தையார் மிகச் சிறப்பான முறையிலே செய்த பூசைகள், ஏனைய கிரியைகள் போன்றவற்றை உடனிருந்து கவனித்த தானும் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து அடிக்கடி தன் தந்தையாரைத் தேடி வந்த சைவ சமயக் குருமார்கள், கல்விமான்கள் ஆகியோருக்கும் தன் தந்தைக்குமிடையே சமய - கிரியைகள் சம்பந்தமான உரையாடல்களை நேரிலே கேட்டபடியாலும், தானும் தந்தையாரைப் போல், சிறப்பு மிக்கவராக வரவேண்டும் என்ற ஆசை, இளவயதிலேயே இவருக்கு ஏற்பட்டுவிட்டது. ஆகவே அக்காலத்திற் சிறப்பாக நடைபெற்ற சுன்னாகம் பிராசீன பாடசாலையிற் சேர்ந்து சமஸ்கிருதப் பேரறிஞர் சிதம்பர சாஸ்திரிகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் சமஸ்கிருதத்தையும் மஹாவித்துவான் சி. கணேசையர் அவர்களிடம் தமிழையும் நன்கு கற்று, தமிழ் - சமஸ்கிருத பால பண்டிதர் பரீட்சையிற சித்தியடைந்தார். பிராசீன பாடசாலையில் இவருடன் சேர்ந்து கற்றவர்களுள் அமரர் நயினை ஐ. கைலாஸநாதக் குருக்கள் குறிக்கத்தக்கவர்.

தமிழகத்திலுள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் இவருடைய ஆசாரியாபிஷேகம் நடைபெற்றது.

ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் 1941 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற பிரம்மோற்சவத்தில், தந்தையார் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் அனுசரணையுடன் இவரே மஹோற்சவ குருவாக இருந்து சகல கிரியைகளையும் மிகச் சிறப்பாகச் செய்தார். 1952 ஆம் ஆண்டில் சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் தர்மபத்தினியும் இவருடைய தாயாருமான ஸ்ரீமதி சிவயோகசந்தராம்பாள் சிவபதமடைந்த பின்னர் இத் தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியராக இருந்து சகல நைமித்தியக் கிரியைகளையும் செய்தார். மகத்தான ஆற்றலும் ஆழ்ந்த அறிவும் நீண்ட அனுபவமுடைய தந்தையாரின் ஆலோசனையும் உதவியும் வழிகாட்டலும் சிறந்த ஒரு சிவாச்சாரியராக இவர் உயர்வதற்குக் காரணமாக இருந்தன.

கோவிலின் பாரம்பரியங்கள் பேணப்படவேண்டும் என்பதில் மங்களேஸ்வரக் குருக்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார். கோவிற் பூசைகள் ஒழுங்காகவும் உரிய நேரத்திலும் நடந்தால்தான் வீடும் நாடும் செழிக்கும் என்பதில் தளரா நம்பிக்கை கொண்டிருந்த இவர் பணத்தைப் பெரிதாகக் கருதாமல் தந்தையின்வழி நின்று பக்தியுடன் பரமனைத் துதிப்பதிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தார்.

காரைநகர் வாழ் மக்களும், குடாநாட்டில் ஏனைய இடங்களில் வசிக்கும் காரை மக்களும், தம் குடும்பங்களில் நடைபெறும் விவாஹம், புதுமனை புகுவிழா, பூப்புனித நீராட்டுவிழா போன்ற மங்கல வைபவங்களுக்கு இவரையே குருவாக வரிப்பதுண்டு. கோவிலில் தான் செய்யவேண்டிய கடமைகள் எவ்விதத்திலும் பாதிப்படையாத வகையில் அந்த மங்கல நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வைப்பார்.

தன்னுடைய இளைய சகோதரர் பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் காரைநகர் மணிவாசகர் சபை, ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் திருவெம்பாவை காலத்தில் ஆண்டுதோறும் நடத்தி வரும் மணிவாசகர் விழாவின் சிறப்பிற்கும் வெற்றிக்கும் இவர் தன்னாலான சகல பங்களிப்பையும் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக இருப்பது அதன் தர்மகர்த்தாக்களுக்கும் சிவாச்சாரியர்களுக்குமிடையேயான சுமுகமான உறவாகும். இந்த உண்மையை நன்குணர்ந்த மங்களேஸ்வரக் குருக்கள், தர்மகர்த்தாக்களான அமரர் அ. ஆண்டி ஐயா, அமரர் து. முருகேசு ஆகியோருடன் எந்நாளும் ஆரோக்கியமான உறவையே பேணிவந்தார். இத்தேவஸ்தானத்தின் இப்போதைய தர்மகர்த்தாக்களான திரு. அம்பலவி முருகன், திரு. மு. சுந்தரலிங்கம் ஆகியோரை பொறுப்பு வாய்ந்த ஒரு தந்தையின் ஸ்தானத்தில் நின்று, நல்லாலோசனைகளை வழங்கி வழிநடத்தினார்.

உடல் நலம் குன்றி சிவாச்சாரியப் பணிகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டபோது தன் சகோதரியின் மகன் சிவஸ்ரீ வி. ஈஸ்வரக் குருக்களைப் பிரதம சிவாச்சாரியராகி, கோவிலின் பாரம்பரியம் தொடர்ந்து காப்பாற்றப்படுவதற்கு வழி செய்தார்.

தந்தையார் கணபதீஸ்வரக் குருக்கள் அவர்களால் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பல இலட்சக் கணக்கான ரூபா செலவில் திருப்பணிகள் பூர்த்தியாக்கப்பட்ட இந்த ஆலயத்தில் 1972 ஆம் ஆண்டில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தின் பிரதம சிவாச்சாரியாராகத் தலைமை தாங்கி மங்களேஸ்வரக் குருக்கள் நிறைவேற்றி வைத்தமை இவருடைய சிவப்பணியின் மணிமுடி எனலாம். இத் தேவஸ்தானத்தின் அருளும் புகழும் மேலும் மேலும் ஓங்குவதற்கும், நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் - கடல் கடந்த பிரதேசங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்களைத் தன்பால் இத் தேவஸ்தானம் ஈர்ப்பதற்கும் இந்தக் கும்பாபிஷேகம் காரணமாக இருந்தது என்று சொல்வது மிகையன்று.

தேவஸ்தானப் பணிகளுக்கு அப்பால் இவரைப் பெரிதும் கவர்ந்தது கர்நாடக இசையாகும். இந்த ஈடுபாடு காரணமாக மங்கள வாத்தியக் கலைஞர்கள் பலர் இவருடைய உற்ற நண்பர்களாக இருந்தார்கள். அகில உலக தவில் மேதையாகத் திகழ்ந்த லயஞானகுபேர பூபதி வி. தெட்சிணாமூர்த்தி அவர்கள் பாலப் பருவத்தில் இவருடைய அரவணைப்பில் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்துடன் இணைந்து வளர்ந்தவர் என்பது இன்றைய சந்ததியினர் பலர் அறியாத உண்மைத் தகவலாகும்.

நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்த வேளையிலும், தன்னிடம் வருபவர்களிடம் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் பணிகளைப் பற்றிப் பேசுவதில் இவர் நிறைவு கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப வாழ்க்கை

1930 ஆம் ஆண்டில் இவர் கந்தரோடை வற்றாக்கை அம்பாள் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ க. சதாசிவக்குருக்கள் - நாகம்மாள் தம்பதியின் மகள் புவனேஸ்வரி அம்மாளைத் திருமணம் செய்தார். ஸ்ரீமதி வாலாம்பிகை கணேசக் குருக்கள், பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசர்மா, பிரம்மஸ்ரீ சரவணபவ சர்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) ஸ்ரீமதி கௌரி தாமோதர ஐயர், ஸ்ரீமதி பத்மாவதி ஸ்ரீநிவாசன், ஸ்ரீமதி சரோஜினி விருத்தகிரீசக் குருக்கள் ஆகியோர் இவர்களின் மக்கட் செல்வங்களாவர்.

தன் குடும்பத்தினருடனும் உறவினருடனும் மட்டுமல்லாமல், கோவிலுக்கு வருகின்ற பலருடனும் இவர் பற்றுடனும் பாசத்துடனும் பழகினார். அடியார்கள் பலரின் பெயர் நட்சத்திரம் - குடும்ப உறுப்பினர் போன்ற விபரங்களை இவர் என்றுமே நினைவில் வைத்திருந்தார்.

உடல் நலமின்மை காரணமாகத் தேவஸ்தானப் பணிகளிலிருந்து இவர் ஒதுங்கிக் கொண்ட போது, காரைநகர் மக்கள், பெருந்தொகைப் பணத்தை இவருக்கு அன்பளிப்பாக வழங்கியமை இவர் மேல் அவர்கள் கொண்டுள்ள பாசத்திற்கும் மதிப்புக்கும் நன்றிக்கும் சான்றாகும்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் ஈழத்துச் சிவனையே நினைத்துக் கொண்டிருந்த சிவஸ்ரீ மங்களேசுவரக் குருக்கள், 26-12-2001 புதன்கிழமை அதிகாலை ஆறு மணியளவில் சுவர்க்க வாயில் ஏகாதசி திதியில் ஈழத்துச் சிதம்பரேஸ்வரனின் திருவடிகளை அடைந்தார்.

ஓம் சாந்தி!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

—திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா

அழகுக்கு அழகு சேர்க்கும் பக்குவமான பாண்டித்தியத்தைப் பறை சாற்றும் பரந்த நெற்றி; அதில் எந்நேரமும் கலையாத விபூதிப்பூச்சு; நடுவில் சந்தனத்திலகம்; அறிவும், ஞானமும் போட்டியிட்டுப் பிரகாசிக்கும் விசாலமான விழிகள்; புன்னகை ஒளி வீசும் சாத்வீக வதனம்; அனைவரையும் ஈர்க்கும் தோற்றம்; தெளிந்த நீரோடை போலச் சலனமற்ற தூயமனம் - இவை பெரியப்பாவை இனங்காட்டுவன, "வெள்ளைக்கில்லைச் கள்ளச்சிந்தை" என்ற முதுமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்த இவரிடம் வஞ்சகமான எண்ணங்களோ, கபடக்குணங்களோ இருந்ததில்லை.

"குருக்கள் ஐயா" என்றும் "தியாகர்" என்றும் காரைநகர் மக்களால் செல்லமாக அன்போடு அழைக்கப்பட்டு வந்த இவர், காரைநகர்ச்சிவன் கோயிலில் 58 ஆண்டுகள் ஆசாரசீலராக இருந்து நியமம் தவறாமல் எம்பெருமானுக்குப்பூசை செய்து வந்த பாக்கியவான். இவர் எல்லோருடனும் மிகவும் அன்பாக உரையாடுவார்; இரக்கமும் அமைதியும் உள்ளவர்; சகோதர பாசம் மிக்கவர்; என் தந்தையாரிடம் மிக மிக அன்பு கொண்டிருந்த பெரியப்பா, நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் இடம்பெயர்ந்து இருந்த போது இரண்டு வருடங்கள் அவரைப்பார்க்க முடியாத நிலையில் மிகவும் மனம் வருந்திக் கொண்டிருந்தார். எம் உறவினர்கள், "இந்தக் காலத்திலே இப்படி ஒரு சகோதர பாசமா" என்று வியந்து பேசுவார்கள். "இருவரும் இராமரும் - இலட்சுமணரும் போல" என்றும் கூறுவார்கள்.

என் தந்தையாரும் பெரியப்பாவிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் உள்ளவர். அண்ணா அண்ணா என்று கூறி, பெரியப்பாவைக் கேட்டே அவரின் ஆலோசனைப்படி எந்தக்கருமத்தையும் செய்வார். இப்போது குமரேசசதகம் என்னும் நூலிலுள்ள செய்யுள் ஒன்றில் வருகின்ற, "தமையன் அருள் வாக்கிய பரிபாலனஞ் செய்தவர் தருமனுக்கு இளைய நால்வர்" என்னும் பகுதிதான் நினைவுக்கு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தந்தையார் தூர இடங்களுக்குச் செல்லும் போது பெரியப்பாவிடம் சொல்லிவிட்டே புறப்படுவார். உடனே பெரியப்பா 'தாமதிக்காமல் வா' என்றும், 'கவனமாய்ப் போய் வா' என்றும் கூறி வழியனுப்பி வைப்பார். தாமதம் ஏற்பட்டால் தவித்தபடியே இருப்பார். இருண்டுவிட்டால் விளக்கையும் கொண்டு கோயில் வாசலுக்கு வந்து நின்று வழிமேல் விழி வைத்துத்தந்தையாரின் வரவை எதிர்பார்த்தபடியே இருப்பார்.

இடப்பெயர்வுக்கு முன்னர், நாமெல்லாம் ஒரு கூட்டுக் குடும்பமாக இருந்தோம். பெரியப்பாவும், பெரியம்மாவும், எமக்கு வழி காட்டிகளாகவும் ஆதரவாளர்களாகவும் இருந்தார்கள். பெரியப்பா ஓய்வாக இருக்கும் போது எமக்குப் பல அறிவுக்கதைகளைக் கூறுவார். திருமுறைகளின் சிறப்பைக் கூறுவார்; புராணக்கதைகளைக் கூறுவார்; புத்திமதிகள் பலவற்றைச் சொல்லுவார்; பழங்காலத்து வாழ்க்கை முறை பற்றிக்கூறுவார். நல்லொழுக்கமாகவும், நேர்மையாகவும், அமைதியாகவும் வாழவேண்டும் என்று எடுத்துரைப்பார். பெரியப்பாவும் பெரியம்மாவும், பெறாமக்களாகிய எங்களையும் தமது பிள்ளைகளைப் போலவே கருதி நடந்தார்கள்.

பெரியப்பா எம் ஊர் மக்களால் பெரிதும் போற்றப்பட்டார். இடம்பெயர்ந்து இருந்தபோதுகூட எம் ஊர் மக்கள் அவரிடம் வந்து ஆசிபெற்றுச் சென்றார்கள். வட்டுக்கோட்டையில் இரு வருடங்கள் அவருடன் இருந்தபோது அங்கே உள்ள மக்களும் அவரிடம் மிகுந்த மரியாதையும், அன்பும் வைத்திருந்தனர். ஓர் அன்பர் தினமும் பெரியப்பாவின் பாதங்களில் மலர்கள் இட்டு வணங்கி வந்தார். இன்னோர் அன்பர் பெரியப்பாவைத் தரிசித்தால் ஈழத்துச் சிதம்பர நடராஜரைத் தரிசித்தது போல இருக்கும் என்று கூறுவார்.

பசு வளர்ப்பதில் பெரியப்பாவுக்கு நிகர் பெரியப்பாதான். மிகுந்த அக்கறையுடனும், அன்புடனும் அவைகளைப் பராமரிப்பார். அவர் சிவன்கோயிற் பூசைக்குச் செல்லும்போது அவர் வளர்த்த பசுக்களும், காளைகளும் அணிவகுத்து அவரைக் கூட்டிக்கொண்டு வரும். இந்தக் காட்சி எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

நாம் வணங்கும் எல்லாத்தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும் பூலோகத்திலே பசுவில் எழுந்தருளியிருக்கிறார்கள். பசுவை ஓப்புதல் மூலம் எல்லாத் தெய்வங்களின் அநுக்கிரகத்தையும் பெற முடியும். வாய்பேசாது எம்முடன் எமக்காக நடமாடும் தெய்வத் திருவுரு பசு. பசுவை ஆதரிப்பது சிவபுண்ணியம் என்று பெரியப்பா கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஊரில் நூறுக்கு மேற்பட்ட திருமணங்கள், புதுமனைப் பிரவேசங்கள் எல்லாம் பெரியப்பாவால் நிறைவேற்றி வைக்கப்பட் டன. அவர் பணத்தையோ பொருளையோ என்றும் விரும்பியது இல்லை. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற முதுமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். ஆடம்பரங்களை அவர் என்றுமே விரும்பியது கிடையாது. எளிமையான வாழ்க்கை, அவர் வாழ்ந்த இல்லம் முனிவர்கள் வாழும் ஆச்சிரமம் போன்றிருந்தது. தம்வாழ்நாள்முழுவதும் ஈழத்துச் சிதம்பர சுந்தரேசனுக்குச் சேவை செய்வதற்கே அர்ப்பணித்திருந்தார். அவரின் சிந்தை முழுவதும் சுந்தரேஸ்வரப்பெருமானே நிறைந்திருந்தார்.

25-12-2001 செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் சுந்தரம் சுந்தரம் என்று மகனைக் கூப்பிட்டார். மகன் சுந்தரேஸ்வரப் பெரு மானின் அபிஷேக விபூதியை நெற்றியிலும் நெஞ்சிலும் பூசினார். அப்பொழுது பெரியப்பா சிவா, சிவா என்று சொன்னார். பின்னர் ராணி, ராணி என்று என்னைக் கூப்பிட்டார். ''பக்கத்தில் இரு: என்னை அமர்த்திப்பிடி; நீ நல்லாய் இருப்பாய்; உனக்குக் கைலாய வீடு கிடைக்கும்'' என்றார். மூன்று மணியளவில் கோப்பி தரும்படி கேட்டார். கோப்பியை பருக்கும் போது எங்கள் வீட்டுப் படலை அருகில் நின்று ஒரு பசு அம்மா, அம்மா என்று கதறியது. அப்போது பெரியப்பாவின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. ஐயாவைக் கூப்பிடு என்று சொன்னார். அவர் வந்ததும் கோயில் கோயில் என்றார். தொடர்ந்தும் சில வார்த்தைகள் தடதடத்த குரலில் கூறினார். அதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் அதிகாலை 4-30 மணிக்குச் சிவன் கோயிலில் இருந்து திருப் பள்ளி எழுச்சிப் பாடல்கள் கேட்கின்றன என்றேன். அதற்குப் பெரி யப்பா ம், ம் என்றார். அப்போதும் கண்ணீர் ஆறாகப் பெருகியது. ஆவி அகத்ததோ புறத்ததோ என்ற நிலையில் இருந்தது. அமைதி யாகப் படுத்திருந்தார். நாம் திருவாசகப் பாடல்கள் பதிவு செய்த ஒலிநாடாவை வானொலியில் போட்டு விட்டோம். அதைக் கேட்ட படியே சதாகாலமும் சுந்தரேஸ்வரப் பெருமானையே தமது இதய பீடத்தில் வைத்துப் பூசித்த பெரியப்பாவின் ஆன்மா காலை 6-05 நிமிடமளவில் சுவர்க்கவாயில் ஏகாதசியாகிய நன்னாளில் ஆனந்த நடராஜனின் ஆனந்த சோதியில் கலந்து விட்டது.

அவர் எமக்குக் கற்று தந்த நன்நெறிகளின் படி ஒழுகுவதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறு ஆகும்.

**—செல்வி இராணி வைத்தீஸ்வரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

—திருஞானசம்பந்தர்

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

மணமென மகிழ்வர் முன்னே மக்கள் தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்
பணையிடைச் சோலைதோறும் பைம்பொழில் விளாகத் தெங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூரப்பனே அஞ்சினேனே.

—சுந்தரர்

## திருவாசகம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

—மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

—திருமாளிகைத்தேவர்

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடலீந்த
பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய
தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பல
மேயிடமாக
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனார்

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

—சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருநாவுக்கரசர் அருளிய

# திருவாரூர் - திருவாதிரைத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண்: குறிஞ்சி

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்த னாரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 1.

இதன் பொருள்: சுவாமி வீதிவலம் வருமுன்னே அட்டதிக்குப் பாலகர்க்கும் பலியிட்டபின்னர் பக்தர்கள் முத்துக்கள் தூக்கிய மேற்கட்டியைத் தாங்கவும், மணிகள் அழுத்திச் செய்த பொற் கவரியை முறைப்படி வீசவும் சிவபக்தராகிய ஆடவர்களுடனே அரிவையரும் சூழ்ந்துவர வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளி வருகின்றார். வித்தகக் கோலத்தையுடையவரும், வெண்டலைமாலையை அணிந்தவரும், விரதிகளுக்கு அத்தனும் திருவாரூரில் அத்தனுமாகிய எம்பெருமானுடைய திருவாதிரை விழாக்கோலம் — திருவாதிரை நாளிலே எழுந்தருளி வருகின்ற விழாக்கோலம் — அதுவாகும்.

விரதிகளென்பார் மாவிரதமென்னும் சமயத்தினரென்றும், விரதங் காக்கும் அடியார்களென்றும் பொருள்படலாம். ஆதிரைநாள் வண்ணம் அது எனப் பெயர்ப்பயனிலை கொண்டது, இவ்விழாவினைக் கண்டார்க்கு வினையில்லையாம் என்பதனை அறிவித்தற்காம். இவ்வாறே பத்து அருட்பாடல்களும் முடியுமாறு காண்க. இத்திருப்பாடல் ஆடவரும் அரிவையரும் வழிபாடாற்றுங்காட்சியைத் தருகின்றது. ஆல். அசை நிலையிடைச் சொல்.

நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்
கணியான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 2.

இதன் பொருள்: இறைவனை அணுகித் தொண்டாற்றும் பெரும் பேறு பெற்ற நல்லவர்களும், அத்தகைய தொண்டாற்றும் பேறு பெறாத சேய்மைக்கண்ணின்று வழிபாடாற்றுபவர்களும் ''எங்கள் பிறவிப்பிணியினைத் தீர்த்தருளுவீராக'' என்று வரங்கிடப்பவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாய் ''பொன்னே மணியே. மைந்தா மணாளா'' என்று நாடோறும் வணங்கித் துதிக்கிறார்கள். இவ்வாறு வழிபடுவாருள்ளே உண்மையான அன்பர்களுக்கு முன்னின்று அருள் பாலிக்கும் ஆரூர்ப் பெருமானுடைய ஆதிரைநாள் விழாக்கோலம் அதுவாகும்.

இவ்வருட்பாடல் ''நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன் — நலமிலன் பேர்சங்கரன்'' எனும் இறைவனது இயல்பு குறித்து நின்றது. பக்தியோடு அணுகிநின்று தொண்டாற்றுபவர் நணியார். உலக பாசத்திலே மனத்தை வைத்துக்கொண்டு வழிபாடாற்ற வந்திருப்பவர் சேயார் இவர்களிருபாலார்க்கும் ஒரே படித்தாய் இறைவன் கிருபை பாலிக்கின்றார். உண்மைப்பக்தர்கள் திருவருளை நுகர்ந்து அருட்சக்தி பதியப்பெறுகின்றனர். ஏனையவர் - சேயார் – இப்பேறு பெறுகின்றிலர் பிணி - உடற்பிணி, பிறவிப்பிணி என்றிரண்டையும் உணர்த்தும் உடல்நோயை மாற்றவேண்டி வரங்கிடப்பாரும் பிறவிநோயை மாற்றவேண்டி வரங்கிடப்பாரும் ''மணியே பொன்னே. மைந்தா மணாளா'' எனத்துதித்து வழிபடுகின்றனர். அணியான் — அண்ணிப்பான் ''ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க'' என்பது மணிவாசகர் சிவபுராணம்.

வீதிகள் தோறும் வெண்கொடி யோடுவி தானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மா மணிகள் ஒளிதோன்றச்
சாதிக ளாய பவளமு முத்துத் தாமங்கள்
ஆதி ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 3.

இதன் பொருள்: எம்பெருமான் எழுந்தருளிவரும் வீதிகளெல்லாம் வெண்மையான கொடிகளும், விதானங்களும் காட்சிதருகின்றன. பதிக்கப்பெற்ற நவரத்தினங்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. உயர்ந்த சாதிப் பவளத்தினாலும், முத்தினாலும் தொடுக்கப்பட்ட மாலைகள் புனைந்தவராகிய ஆரூரில் ஆதிப்பிரான் திருவாதிரைத் திருவிழாவிலே எழுந்தருளி வருகின்ற திருக்கோலம் அதுவாகும்.

இவ்வருட்பா விழாக்கோலம் பூண்டிருந்த வீதிகளினூடே எம்பெருமான் எழுந்தருளிவருங் காட்சியைத் தருகிறது. உயர்ந்தசாதிப் பவள மாலைகளையும், முத்துமாலைகளையும் வீதிகளிலே தூக்கி அலங்காரம் செய்யப்பட்டிருந்ததாகவும் கொள்ளலாம். ''திருக்கோயிலில்லாத'' என்னுந் திருத்தாண்டகத்திலும் ''விதானமும் வெண்கொடியுமில்லாவூரும் ஊரல்ல அடவிகாடே'' எனப் பெருமானுக்கு விழாவெடுக்காத ஊர் ஊரல்ல எனச் சுவாமிகள் அருளிச் செய்தமை காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்கள் பேசிக் கூடிப் பாடித் தொண்டர்கள்
பிணங்கித் தம்மிற் பித்தரைப் போலப் பிதற்றுவார்
வணங்கி நின்று வானவர் வந்து வைகலும்
அணங்கன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 4.

இதன் பொருள்: மெய்யடியார்கள் இறைவனுடைய பெருமைகளையும் அருளிப்பாடுகளையும் கூடிப்பேசி மகிழ்வார்கள். பாடிமகிழ்வார்கள். தமக்குள்ளே மாறுபட்டுப்பேசி பைத்தியகாரர் போலப் பிதற்றுவார்கள். நாடோறும் வானவர்களும் இவ்விழாக்காணவந்து வணங்கிநிற்பார்கள். இவ்வாறு விண்ணவரும் மண்ணவருந் தொழுது நிற்கும் ஆரூர்ப் பெருமானது திருவாதிரை நாள் விழாக்கோலம் அதுவாகும்.

அடியவர்களது அன்புமீதூர்ந்தநிலை இவ்வருட்பாடலில் விபரிக்கப்படுகிறது. சிவஞானசித்தியாரில் மெய்யடியார் இயல்புகளை "பாலருடன் உன்மத்தர் பிசாகர் குண மருவிப் பாடலினோடு ஆடலிவை பயின்றிடினும் பயில்வார்" எனக் கூறப்படுதல் காண்க. அணங்கன் அழகுடையவன் பிரிந்திருக்கு மடியார்களைப் பிரிவுத் துயரால் வருத்துபவன் என்றும் பொருந்தும்.

நிலவெண் சங்கும் பறையும் ஆர்ப்ப நிற்கில்லாப்
பலரு மிட்ட கல்ல வடங்கள் பரந்தெங்கும்
கலவ மஞ்ஞை காரென் றெண்ணிக் களித்து வந்(து)
அலம ராரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 5.

இதன் பொருள்: திருவாதிரை விழாவின்போது ஆரூர்ப் பெருமானைக் கைதொழுமடியார்கள் பலரும் வெண்சங்குகளையும் மேளவாத்தியங்களையும், கல்வலகு என்னும் வாத்தியத்தையும் எங்கும் ஆரவாரத்தோடு ஒலித்தனர். இவற்றின் முழக்கவோசையைக் கேட்ட மயில்கள் கார்மேகங்களின் முழக்கமென்றெண்ணிப் பெருங்களிப்புற்று அவ்விடம் நோக்கி வந்தன. அவ்வொலி விழாமுழக்கமென்பது கண்டு ஏமாந்து வருந்தின. இத்தகைய ஆரவாரங்கள் நிறைந்த ஆதிரை விழாவின் திருக்கோலம் அதுவாகும்.

இவ்வருட்பாடல் அடியார்கள் பலவகை வாத்தியங்களையும் முழங்கிக்கொண்டு சென்ற காட்சியை விபரிக்கிறது. கார்மேகத்தைக் கண்டுகளித்துத் தோகையை விரித்தாடுவது மயில்களினியல்பு. முழவோசையை முழக்கமென்றெண்ணிக் கார்மேகம் காணவந்த மயிற்கூட்டம் அதுகாணாமையால் வருந்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண் பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்
எம்மான் ஈசன் எந்தை எனப்பன் என்பார்கட்
கம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 6.

இதன் பொருள்: தன்வய மிழந்த பக்தர்கள் விம்மி விம்மி அழுவார்கள். உரத்த சப்தத்துடனே பாடியாடிக் குதூகலிப்பார்கள். அச்சமடைந்தவராய்ப் பக்திபரவசத்தராகித் தங்கள் தலைகளை மோதப்போவார்கள். இச் செயல்களால் விழாக்காணவந்தவர்களையும் அச்சமுறச்செய்வார்கள் எம்பெருமானே ஈசனே. எந்தையே, அப்பனே என்று இவ்வாறு ஓலமிட்டு வழிபடுகின்ற அடியவர்களுக்கு பெரும் பெருமானாக விளங்கித் திருவுலாவருகின்ற ஆரூரப்பனின் ஆதிரைநாள் விழாவின் வண்ணம் அதுவாகும்.

இவ்வருட்பாடல் பக்திபரவசமானவர்களின் மெய்ப்பாடுகளை விபரிக்கின்றது. அப்பர்சுவாமிகள் திருக்கைலாயக்காட்சியைக்கண்டு பரவசமான நிலையினைச் சேக்கிழார் சுவாமிகள்.

"கண்டவானந்தக் கடலினைக் கண்களால் முகந்து
கொண்டுகைகுவித் தெதிர்விழுந் தெழுந்துமெய் குலைய
அண்டர் முன்புநின் றாடினார் பாடினார் அழுதார்
தொண்டனார்க்கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்"

எனப் பாடியருளுகின்றார். அடியார்தம் மெய்ப்பாடுகளை ஒப்பிட்டு நோக்கி உணர்ந்துகொள்க.

செந்துவர் வாயார் செல்வன சேவடி சிந்திப்பார்
மைந்தர்க ளோடு மங்கையர் கூடிம யங்குவார்
இந்திர னாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்
அந்திர னாரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 7.

இதன் பொருள்: திருவாரூரிற் கோயில் கொண்டருளிய வன்மீக நாதருடைய திருவடித் தாமரைகளையே சிந்தித்துத் தம்மைமறந்தவராகிய மங்கையர்கள் விழாப்பொலிவினைக் காணும் வேட்கையராய் மைந்தர்களோடு ஒருங்கு கூடிநின்று வழிபடுவாராயினார். இந்திராதி தேவர்களும் சித்தர்களும் வணங்கித் துதிக்கும் ஆரூர்ப் பெருமானது ஆதிரை நாள் விழாவின் தன்மை அதுவாகும்.

மங்கையரும் மைந்தரும் தங்களை மறந்தமையினாலே ஒருங்கு கூடிநின்று விழாப்பொலிவினைக் கண்டுகளித்த காட்சி இங்கு விபரிக்கப்படுகின்றது. அந்திரன் - பிரளய காலத்திலும் அழியாது நிலைநிற்கும் கடவுள் - சிவபெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகள் வணங்கி மூவா தார்கண் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடுந் தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 8.

இதன் பொருள்: தேவர்கள் இறைவனை முடிதாழ்த்தி வணங்கிக் கொண்டு முன்னே செல்கின்றனர். மூங்கில்போலும் திரண்ட தோள்களையுடைய தேவமங்கையர்கள் வணங்கிக்கொண்டு எம்பெருமானுக்குப் பின்னே செல்கின்றனர் திருநீற்றை உடம்பெங்கும் உத்தூளனமாகப் பூசிக்கொண்டு பக்திபரவசத்தராய்ப் பாடுகின்ற தொண்டர்கள் வீதியுலாவரும் பெருமானை நான்கு பக்கமுஞ் சூழ்ந்து வணங்கிக்கொண்டு வருகின்றனர். திருவாரூரில் எழுந்தருளி வருகின்ற எம்பெருமானது திருவாதிரை நாள் விழாவின் கோலம் அதுவாகும்.

வீதி விடங்கப்பெருமானுடைய விழாச் சிறப்பினைக்காண விண்ணவரும் வந்திருந்தாரென்னும் தனிப்பெருமையினை இப்பதிகத்து மூன்று பாடல்களில் அப்பர்சுவாமிகள் அருளிச் செய்திருக்கின்றார். மண்ணவரோடு தேவர்களும் கூடிநின்று எம்பெருமானை வழிபட்டார்கள். விழாப் பொலிவினைக் கண்டுகளித்தார்கள் என்கின்ற செய்தி எண்ணி இறும்பூது எய்துதற்குரியது. மூவாதார்கள் – அமுதமுண்டமையினாலே நரை, திரை, மூப்பு எய்தாது வாழும் தேவர்கள்.

துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை ஏத்து நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்ப னாரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 9.

இதன் பொருள்: மெய்யடியார்கள் "எம்பெருமானே தேவரீரை ஏத்திப்பாடித் தொழாத நாள்கள் எமக்குத் துன்பந் தருவன" என்பாரும் "தேவரீரை ஏத்திப்பாடித் தொழுகின்ற நாள்கள் எமக்கு இன்பந்தருவன" என்பாரும் "தேவரீரது குழாத்துள் எம்மையும் ஒருவனாக நுழையுமாறு பணித்தருள்வீர்களாக என்பாருமாய்த் தொழாநிற்கின்றனர். அன்பர்களுக்கு அன்பனாகிய திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானது திருவாதிரை விழாவின் சிறப்பு அதுவாகும்.

இவ்வருட்பாடல் விழாவின்போது அடியார்கள் எம்பெருமானை எவ்வாறு ஏத்திவேண்டிக் கொள்கிறார்கள் என்பதை விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அரியானை அந்தணர் தம்சிந்தை யானை'' என்னும் பதிகம் முழுவதிலும் ''பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்று நாவுக்கரசர் அருளிச் செய்தமை காண்க. ''வீழ்நாள் படாஅமை நன்றாற்றாற்றின் அஃதொருவன் – வாழ் நாள் வழியடைக்குங் கல்'' என்பது திருவள்ளுவர் தமிழ்மறை இக் கருத்துக்களோடு இவ்வருட்பாவின் பொருளை ஒப்புநோக்கியுணர்க.

பாரூர் பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல் அறாத செம்மாப்பார்ந்
தோரூர் ஒழியா துலகம் எங்கும் எடுத்தேத்தும்
ஆரு ரன்றன் ஆதிரை நாளால் அதுவண்ணம். 10

இதன் பொருள்: கடல் சூழ்ந்த பூவுலகின் கண்ணுள்ள பத்தி நிறைந்த அடியவர்கள் பணிந்து துதிக்க சிறந்த பாடல்களோடு, பக்திபரவசத்தராய் ஆடுதலும் நீங்காத பெருஞ் சிறப்புக்கள் பொருந்தி விளங்கும் திருவாரூர்ப் பெருமானை உலகமெங்கும் ஏத்தித்துதிக்கும் ஆரூர்ப் பெருமானின் விழாவின் தன்மை அதுவாகும்.

உலகமெங்கணும் உள்ளவர்கள் ஆரூர்ப்பெருமானின் ஆதிரை விழாச்சிறப்பினை எடுத்தேத்தும் என்பது இத்திருப்பாடலால் விளக்கப்படுகின்றது. செம்மாப்பு என்பதற்கு இறுமாப்பு எனப் பொருள் கொண்டு, பாடுவாரும் ஆடுவாருமாகிய தொண்டர் கூட்டம் கழி பேருவகையினாலே இறுமாப்படைந்து ஏத்தித்துதிக்கும் எனமுடிபு செய்தலும் பொருந்துவதாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் திருஅரங்கமாலையிலே ''இறுமாந்திருப்பன் கொலோ - ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டு'' என்று அருளிச் செய்கின்றார். அடியவர்களுக்கும் இறைவனது சிவகணத்தாருளொருவராக எண் ணப்படுதலில் ஒரு பெருமை - ஒரு இறும்ாப்பு உண்டென்பது இதனால் விளங்குகிறது.

உரையாசிரியர்

பண்டிதர், வித்துவான், சைவப்புலவர்

**திரு. சி. சரவணமுத்து அவர்கள்**

●

''உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்''

— திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

எமது குடும்பத் தலைவர் நோயுற்று இருந்த போது மருத்துவ உதவி புரிந்த வைத்தியர்களுக்கும்,

அவரின் பிரிவால் நாம் துயருற்றிருந்த போது ஆறுதல் கூறி ஆற்றுப்படுத்தி உதவிய உற்றார், உறவினர், நண்பர், அயலவர்களுக்கும்,

இறுதிக் கிரியைகளின்போது மலரஞ்சலி செலுத்தி கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும்,

நேரடியாகவும், தபால், தந்தி, தொலைபேசி வாயிலாகவும் அநுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,

இரங்கலுரை நிகழ்த்திய அன்பர்களுக்கும்,

இன்னும் பல்வேறு வகைகளிலும் உதவிய அனைவருக்கும்,

இந் நூலைக் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய பாரதி பதிப்பகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

— குடும்பத்தினர்

நடுத்தெரு,
காரைநகர்.
04-01-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம்,430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org